தென்றல்

விலை 16 புதிய காசுகள்

~ ஆசிரியர்: கண்ணதாசன் ~

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, பங்குனி 22 (4-4-'59). சனிக்கிழமை | இதழ் 42

கடன் வாங்காதீர்

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் நான்காவது ஆண்டிற்கான பெருந்தொகை இல்லாமல் இந்தியா அவதிப்பட்டுக்கொண்டிருப்பதைக் காணச் சகிக்காத, பரோபகாரச் சிந்தை படைத்த மேற்கு நாடுகளான அமெரிக்கா, ஜெர்மனி, கனடா, பிரிட்டன், ஆசிய நாடான ஜப்பான், உலக பாங்கு ஆகியவை 300 மில்லியன் டாலர்களைக் கடனுகக் கொடுத்து உதவ முன் வந்துள்ளன. அண்மையிலே கூடிய ஒரு மாநாட்டில் இந்தத் தொகை தந்துவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய நாடு பல நாடுகளிலிருந்தும், பல வகையிலும் கடன் வாங்கிக்கொண்டு வருவது அனைவரும் அறிந்ததே. மேலும் மேலும் கடன் வாங்கிக்கொண்டே வருகிறது; வாங்கிய கடன்களைக் கொடுக்க என்ன செய்வது என்று அவதிப்படக் காணோம். அதே நேரத்தில் மேலும் மேலும் கடன் வாங்கிக்கொண்டே போகிறது. அதிலே வியப்புக்குரிய செய்தி என்ன என்றால், இரண்டாவது உலகப் போரில் அணுகுண்டு வீச்சால் பெரும்பாலும் அழிந்துபோன ஜப்பான் நாடு-சின்னஞ் சிறிய நாடு-பாரத தேசத்திற்கு-போரினால் பெரும் அளவிற்கு பாதிக்கப்படாத ஒரு பெரிய நாட்டிற்கு கோடிக் கணக்கில் பண உதவி செய்ய முன் வந்திருப்பதேயாம்! உலக வரலாற்றில் விந்தை மிக்க இச்செய்தியைப் போல் யாரும் இதுவரை படித்திருக்க முடியாது! அதேபோல் தான் ஜெர்மனியும் இரண்டாவது உலகப் போரில் பெரும்பாலும் நசுங்கி, நாசமாகி, சின்னப் பின்னப்பட்டுப் போயிற்று. அந்த நாடு நமக்கு கடன் கொடுத்துதவ முன் வருகிறது!

இது எதைக் குறிக்கிறது? அந்த நாடுகள் போரினால் ஏற்பட்ட அழிவைச் சமாளித்துக்கொண்டதோடு, புது எழுச்சியும் பெற்றுவிட்டதோடு, இந்தியாவைப்போன்ற ஒரு பெரிய நாட்டிற்குக் கடனுகப் பணமும், இயந்திரங்களும், அவைகளை இயக்கும் நிபுணர்களும் தந்து உதவும் அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவோ பிறநாடுகளிலிருந்து ஓயாமல் கடன் வாங்கிக் கொண்டு வருகிறது. இதைத்தான் அண்மையில் நடந்த ஒரு கூட்டத்தில் இராஜகோபாலாச்சாரியார் "நாம் மஞ்சள் காகிதம் கொடுக்கும் நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறோம்" (We are heading towards bankruptcy) என்று வெகு கச்சிதமாகக் குறிப்பிட்டார்.

நமக்கு ஏராளமாகக் கடன் கொடுத்துதவும் பரோபகாரச் சிந்தை அதிகம் கொண்டது அமெரிக்காவாகும். இவர்கள் இந்தியாவை எப்படியும் "கம்யூனிஸ்ட் அபாயத்திலிருந்து" தடுத்துவிட வேண்டும் என்ற ஒரே பரந்த நோக்கத்தில் கடன் கொடுக்கத் தயங்கவில்லை. மொத்தமாகக் கடன் கொடுக்கிறார்கள்; இந்திய அரசாங்கத்திற்கு. தனிப்பட்ட முதலாளிகள்—டாடா, பிர்லா போன்ற பிரமுகர்கள் துவங்கும் தனிப்பட்ட கம்பெனிகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். இந்திய அரசாங்கம் துவங்கும் பல திட்டங்களுக்கென்று தனியே கடன் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு திட்டத்தின் தொகையிலும் ஒரு பெருமளவிற்கு அமெரிக்கா உதவி செய்யும் என்று பரந்த நோக்கத்தோடு அறிவிக்கிறார்கள். வேறு சொற்களில் கூறினால், ஒவ்வொரு திட்டத்திலும் அமெரிக்காவின் பணம் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இன்னும் பச்சையாகக் கூறினால், ஒவ்வொரு திட்டமும் அமெரிக்காவிற்கு அடகு வைக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் ஒரு செய்தி வந்தது. அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி பாங்கி (U.S. Export-Import Bank) இந்தியாவில் தனியார் துறையில் பம்பாயில் இயங்கும் தேசிய ரயான் கார்ப்பொரேஷனுக்கு (National Rayon Corporation) 1.8 மில்லியன் டாலர்களைக் கடனுகக் கொடுத்துதவ முடிவு செய்துள்ளது. மேலும் ஆசியா, மத்திய கிழக்கு ஆகிய நாடுகளுக்கு 'வெளிநாட்டு உதவி' என்ற பெயரில் உதவி செய்ய 1866 கோடி ரூபாய்கள் ஒதுக்க வேண்டுமென்று காங்கிரஸை ஐஸன்ஹோவர் வேண்டியிருக்கிறார். என்னே தயாளம்! என்னே தாராளம்!

இந்தியாவில் பெரிய பெரிய நதித் திட்டங்கள் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக அமெரிக்கா சுமார் 400 கோடி கோடி ரூபாய்களைத் தர முன் வந்துள்ளது. இந்தத் தொகையை 40 ஆண்டுக் காலத்திற்குள் திருப்பித் தந்துவிட வேண்டும். இத்தொகைகளாவன:

ரிஹாண்ட்-88.3	மில்லியன்	ரூபாய்கள்
ஷாராவதி-69.7	,,	,,
சம்பல்-130.4	,,	,,
ஹிராகுட்-46.4	,,	,,
தாமோதர்-113.9	,,	,,
மகி-20.4	,,	,,
காக்ரபூர்-30.2	,,	,,
நாகார்ஜுன சாகர் 89.9		,,
பத்ரா-63.7	,,	,,
துங்கபத்ரா-35.1	,,	,,
மஹாநதி-52 0	,,	,,
	மில்லியன்	ரூபாய்கள்
குந்தா-76.3	,,	,,
கோயினா-114.9	,,	,,

இந்த அளவில் செலவிடப்படும் என்று தெரிகிறது.

இதே ரீதியில் போனால், அமெரிக்கா ஒவ்வொரு திட்டத்திற்கும் உதவி செய்கிற போர்வையில், ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் தன்னுடைய டாலரின் பெருமையை நிலை நாட்டிக்கொண்டு வருகிறது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் கந்தசாமி, முனுசாமி, மாடசாமி, மன்னார்சாமி துவங்க இருக்கிற வெற்றிலை பாக்குக் கடை, ஆப்பக்கடை, தண்ணீர்ப் பந்தல்களுக்கும் நாளைய தினம் அமெரிக்க அரசினர், தனிப்பட்டவருக்கு உதவி புரிகிற போர்வையில் டாலர்களைக் கொட்ட முன் வரலாம்; அதேபோல் சென்னை நகரத்தில், ஒற்றைவாடை ரோட்டில் தார் போட ஒரு திட்டம் சென்னை நகராட்சியினர் தீட்டி, உரியோருக்கனுப்பினால், மத்திய அரசினர், பணமில்லை என்று தவிப்பதைக் காணப் பொறுக்காத, அமெரிக்க அரசினர் ஒற்றைவாடை ரோடு தார் பூசும் திட்டத்திற்குத் தங்கள் டாலர்களை வாரி இறைக்க முன் வரலாம்; இதேபோல் ஒவ்வொரு சிறுசிறு திட்டத்திலும் தங்கள் முத்திரையைப் பதித்துக்கொள்ள ஏற்படலாம்.

இந்த நிலையில் செய்ய வேண்டுவது யாது? "பிறநாட்டிலிருந்து கடன் வாங்காதே" என்று வெகு எளிதாய்க் குழந்தைத் தனமாய்ப் பொருளாதாரம் தெரியாதவர்கள் பேசுவதுபோல் நாம் கூறமுடியாது. பிறநாட்டிலிருந்து கடன் வாங்காமல் எந்த நாடும் பொருளாதார முன்னேற்றம் அடைந்ததாகக் கூறுவதற்

— 5-ம் பக்கம் —

சென்னையில் தேர்தல் நிலை

உள்ளே காண்க.

தேர்தல் களத்தில் தியாகியர் கூத்து!

தேர்தல்கள் நடந்துவிட்டன, நகராட்சிகளுக்கு. இறுதியாகச் சென்னைப் பெருநகராட்சியின் தேர்தல்கள் இத்திங்கள் 4, 6 & 7-ம் நாட்களில் நடக்கவிருக்கின்றன. பல்தரப்பினர் தங்கள் தங்கள் கொள்கைகளை முழங்கிக்கொண்டு ஊர்வலம் வருகின்றனர்; வாக்குக் கேட்கின்றனர்; எங்கும் ஒரே ஆரவாரம்!

சிலரது பணப் பெட்டிகள் வற்றவும், வேறு சிலரின் தொண்டை கிழியவும் வாக்கு வேட்டை நடைபெறும் இக்களத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும் போட்டியிடுகிறது. பல்வேறு இயக்கங்களின் சார்பிலும் தனித்தோராகவும் போட்டியிடுவோர் பட்டியல் வருமாறு!

தி. மு. க. 90
காங்கிரஸ் 100
கம்யூனிஸ்ட் 13

ஜனசங்கம், பி. சோ., சோஷலிஸ்ட், சுயேச்சைகள் ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

இவருள் கழக ஆதரவு பெற்ற சுயேச்சைகள் 10.

கடுமையான போட்டிக்கிடை இன்று தொடங்கும் சென்னை நகராட்சியின் தேர்தல்களுக்கு முன், நாம் ஓரளவாகிலும் நகராட்சியின் நிலையை அறிந்துகொள்ள இருக்கிறோம்!

சென்னை நகரின் பரப்பளவு 49.74 சதுர மைல்களாகும். 1957'58-ம் ஆண்டுக் கணக்குப்படி சென்னையின் குடிமதிப்பு 18, 12, 694 ஆகிறது. 1951-ல் இதன் குடிமதிப்பு 14, 16, 056 தான். இடையிலே ஏற்பட்டுள்ள வளர்ச்சிமட்டும் 396638 ஆகும்.

இவ்வாறு வளர்ந்து வரும் மக்கள் தொகையும் பெருகிவரும் நகரின் பரப்பும் நகரின் தேவைகளை அதிகப்படுத்துகின்றன. இப்போதுள்ளவற்றைவிடப் பன்மடங்கு மருத்துவ உதவிகளும், நீர் வசதியும், ஒளி வசதியும், புதை சாக்கடை அமைப்பும் வேண்டப்படுகின்றன. பணமும் அதற்கேற்ப மிகுதியாய் வேண்டியுள்ளது. "இவற்றையும் சேரிச் சீர்திருத்தத்தையும் இயன்ற அளவு இந்நகராட்சி செய்து முடித்திருக்கிறதென்றாலும் வேண்டிய அளவு செய்ய முடியவில்லை, போதிய பணமில்லாததால்!" என்கிறார் ஆணையாளர் தன் நிதி நிலை அறிக்கையில்.

வரவு-செலவுத் திட்டம்தான் நிதி நிலை அறிக்கை எனப்படும். சென்னை நகராட்சிச் சட்டப்படி, ஆணையாளர் ஆண்டு தோறும் ஜனவரி 15-ம் நாளோ, அதற்கு முந்தியோ வரவு—செலவுத் திட்டத்தை வெளியிட வேண்டும். இவ்வரவு-செலவுத் திட்டம் நகராட்சியின் பல்வேறு துறைகளிலும் வரக்கூடிய வருவாயையும் செலவையும் மதிப்பீடு செய்து வகுக்கப்படுவதாகும்.

நகராட்சியின் **வருவாய்த்துறை** (Revenue) வருமானம்வரும் மூன்று வழிகளாவன: 1. கேளிக்கை வரி, நகராட்சி வாடகைக்கு விடும் கட்டடங்கள்—திடல்கள் மூலம் வரும் வருமானம், நாள் சந்தை (Market) முதலியவற்றை அடக்கிய பொதுக் கணக்கு வருமானம் 2. விளக்கு வரி உள்ளிட்ட விளக்குக் கணக்கு வருமானம். 3. தண்ணீர் வரி, மேற்படி மீட்டர் வாடகை முதலியவை உள்ளிட்ட நீர் வழங்கல் & புதை சாக்கடைக் கணக்கு வருமானம். வேறு வருமானங்களும் இவற்றில் அடங்காது வருகின்றன.

சென்ற ஆண்டின் (1958-'59) வரவு-செலவுத் திட்டப்படி நகராட்சியினர் எதிர்பார்த்த மொத்த வருமானம் ரூ. 325 இலட்சத்து 10 ஆயிரம்.

எதிர்பார்த்த மொத்தச் செலவு ரூ. 347 இலட்சத்து 39 ஆயிரம்.

எனவே துண்டு விழுந்த தொகை ரூ 22 இலட்சத்து 29 ஆயிரம்.

சென்னை நகரில் பல்வகை வளங்கொழித்தும் பற்றுக்குறை ஏற்பட்டதேன்? மிகுந்த பரப்பும் பெருத்த வருமானமும் இருந்தும் சென்னை நகராட்சியினர் அரசினரின் கடன்களையும் மான்யங்களையும் எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏன்? சில குறைகளை, தமது வரவு செலவுத் திட்ட அறிக்கையிலும் நிர்வாக அறிக்கையிலும் ஆணையாளர் விளக்கியுள்ளார். அவற்றையும், நாம் பார்த்ததில் பட்டவற்றையும் சேர்த்து ஆராய்வோம்.

பொதுவாக, சென்னை நகராட்சியினர் வருமானம் தரும் பலவற்றைப் பெறமுடியாதபடி தடுக்கிறது, சென்னை மாநில அரசும் பிறவும்.

சென்னை நகரில் கீழ்க்கண்டபடி மோட்டார் வாகனங்கள் உள்ளன:

மோட்டார் கார்	11834
,, லாரி	2432
,, பஸ்	667
,, சைக்கிள்	2511
,, டேக்சி	608
ஆட்டோ ரிக்ஷா	314
பிறவகை வண்டிகள்	77
மொத்தம்	18043

சென்னையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் மட்டும் 470 ஓடுகின்றன.

இவற்றின் மூலமாகச் சென்னை மாநில அரசு 1931-ம் ஆண்டு மோட்டார் வாகன வரிச் சட்டப்படி ரூ 68 இலட்சத்து 53 ஆயிரத்து 13-ம் மோட்டார் வாகனங்களின் கட்டணங்கள் வகையில் ரூபாய் 5,47,992 ம் பெறுகிறது. இவற்றுள் நகராட்சியினர் தம் வாகனங்களுக்கான வரிக்கும் கட்டணத்திற்கும் ரூ. 2 இலட்சத்து 2 ஆயிரம் செலுத்துவதும் அடங்கும்.

அதேபோது நகராட்சியினர், இவ்வாகனங்கள் எளிதில் செல்வதற்காக நகர்த் தெருக்களைச் செம்மைப் படுத்தவும் புதுப்பிக்கவும் '57 58-ம் ஆண்டில் செலவழித்திருப்பது மட்டும் ரூ 55 இலட்சமாகும். ஆனால் மாநில அரசோ ஆண்டு தோறும் சென்னை நகராட்சியினர்க்குத் தரும் "காம்பன் சேஷன்" தொகையோ 3 இலட்சத்து 65 ஆயிரம் மட்டுமே! நகராட்சியினர் தம் வாகனங்களுக்கு வரியும் கட்டணமும் செலுத்தியது போக இத்தொகையில் மிஞ்சுவது 1 இலட்சத்து 63 ஆயிரம்தான். நடப்பு ஆண்டில் சைக்கிள் வரியின் மூலம் 2 இலட்சம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறதாம். கூட்டிக் கழித்துப் பார்த்தால், மோட்டார் வகையருக்களின் வசதிக்காக பாதைகளைச் செப்பனிடச் சென்னை நகராட்சியினர் செலவழித்ததோ 55 இலட்சங்கள்! மாநில அரசினர் தரும் ஈட்டுத் தொகையில்மீதமோ 1 இலட்சத்து 65 ஆயிரம்தான்! எவ்வளவு பெரிய ஏமாற்றம்? "குறைவான ஈட்டுத்தொகையையே பெறுவதால், செலவுக்கு வேண்டியதைப் பெற இயலவில்லை; பலமுறை கேட்டும் பயனில்லை" என்கிறார் ஆணையாளர்.

"இவை அல்லாமல் சென்னை அரசினர் தாம் நடத்தும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் மூலமும் விநியோகிக்கும் மின்சாரம் மூலமும் சென்னை நகர் மக்களிடமிருந்து ஆண்டு தோறும் பல இலட்சங்களைப் பெறுகின்றனர். சென்னை நகரிலிருந்து பெறப்படுவதால் அவற்றின் இலாபத் தொகையில் ஒரு பகுதியையாகிலும் சென்னை நகராட்சியிடம் தருவது தான் முறையானது; நியாயமானது. ஆனால் அரசினர் எதையும் தரவில்லை பல முறையும் கேட்டு!" என்பதாக வேறு ஆணையாளர் வருத்தப்படுகிறார். இது ஆணையாளரின் இயலாமையால் வந்தது என்பதை விட நகராட்சி உறுப்பினரின் அக்கறையின்மையாலும் கவலையற்ற போக்காலுமே வந்தது என்பதே பொருந்தும்.

மற்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்நகராட்சியும் குடிநீர் வசதி செய்தல், புதை சாக்கடை அமைத்தல், குறைந்த வருமானமுள்ளோர்க்குக் குடியிருப்புக் கட்டல், சேரி சீர்திருத்தல், இருப்புப்பாதைகளின்மேல் பாலம் கட்டல் ஆகியவற்றிற்கு உதவித் தொகை பெற வாய்ப்புக்கள் இருக்கின்றன; ஓரளவு பெற்றும் இருக்கிறது. ஆனாலும் வேண்டிய அளவு கிடைக்கவில்லை. ஏன்? கோடம்பாக்கத்தில் ஒரு மேல் பாலம் கட்ட வேண்டி வேண்டி அலுத்துப்போயினர் நகர் மக்கள்! அய்யனாவரம் பகுதியில் குடி தண்ணீர் வசதியும் புதை சாக்கடை அமைப்பும் பற்றுது அன்னார் படும்பாடு கொஞ்சமன்று! குறைந்த வருமானமுள்ளோர்க்குக் குடியிருப்புக் கட்டுவதில் தாமதம்தான் கண்ட பலன்! சேரிச் சீர்திருத்தத்தை ஆமை வென்று விட்டதே. ஏன்? எப்படி? அவற்றிற்கும் ஆணையாளர் கூறும் பதில், "தில்லி அரசின் உதவியை எளிதில் பெறமுடியவில்லை; தேவையான அளவு பெறமுடியவில்லை" என்பதாகத்தான் உள்ளது.

"ஏன்?" என்பதற்குக் கிடைக்கும் பதில்கள்-காட்டப்படும் அவலங்கள் இவை; நகராட்சியில் உள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மை காங்கிரசுக்காரர்களே ஆனபடியால், சென்னைஅரசான தம் தந்தையர் அரசைத் தட்டிக் கேட்கவும்,

— 8 ம் பக்கம் —

அலமேலு அப்பாத்துரையார்

அ. பொ. அரசு

தி. சு. நல்லதம்பி


கோ. இளவரசு

தென்றல்

சுவர்

எப்பொழுதெல்லாம் உன் கடிதம் எனக்குக் கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் மணிக்கணக்கில் அதைக் கையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிடுகிறேன், உன் மனத்தைப் பிடித்துக் கொண்டதுபோல. உன் கடிதம் மூலமாக எனக்குத் துக்கம் நிறைந்த உன் முகமும், வேதனையால் துடிக்கும் கண்களும் நினைவுக்கு வருகின்றன. சோகமும், துன்பமும் நிறைந்த உன் வாழ்க்கையை, உன் கடிதத்தின் ஒவ்வொரு 'பாரா'வும் பறைசாற்றுகின்றன.

உன் மனதை என் கையில் பிடித்துக்கொண்டு யோசித்து வருகிறேன், நமது வாழ்க்கை இப்படியாக அமைந்துவிட்டது. ஒவ்வொரு புதிய துன்பச் செயல்களும் என் மனதை இரும்பாக்கி வரும்போது உனக்கு அவ்வளவும் வேதனை கொடுப்பதாக இருக்கிறது. இதனால் தான் நம் வாழ்க்கைப் பாதைகள் வெவ்வேருக இருக்கின்றன.

நீ இங்கிருந்து சென்று ஏழு மாதங்களாகிவிட்டன. முந்நூறு மைலுக்கு அப்பால் சென்றுவிட்டாலும் எனக்கு ஏழுமாத தூரம் சென்றுவிட்டது போலிருக்கிறது. அதைக் கடந்து வந்து உன்னை அடைய என்னால் முடியாது. இந்த நிலையில் நீ எழுதும் கடிதங்களுககெல்லாம் என்னிடமிருந்து பதிலே வருவதில்லை. இருந்தாலும் நீ உன்னுடைய துன்பங்களையெல்லாம் எனக்கு எழுதி, இரும்பு போன்ற என் மனத்தைக கரைக்கப் பார்க்கிருய். இந்த மனத்தில், உன் எண்ணங்களின் தீ என்னைச் சுடாததால் நீ கடிதம் எழுதுவதைக்கூட நிறுத்திவிட்டாய் போலிருக்கிறது!

'தினமும் என் மனக்கண்ணில் படுகிறீர்கள்' என்று சென்ற கடிதத்தில் எழுதி, என் மனத்தைக் கலைக்கப் பார்க்கிருய். ஆனால் துளசி! உன் ஆசைகள் எல்லாம் நிறைவேருது. எனக்குத் திருமணம் ஆகிவிட்டதால் இதைச் சொல்கிறேன்.

இதைக் கேட்டு நீ திடுக்கிடுவாய். சென்ற மாதத்தில்தான் என்னைத் திருமண வாழ்வில் மாட்டிவிட்டார்கள். "கல்யாணமா? அவருக்கு கல்யாணமாகிவிட்டதா?" என்று இந்நேரம் உன் மனது இக்கேள்வியைக் கேட்டிருக்கும். ஆமாம் துளசி! எனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது!

நீ ஊருக்குப் போகும்போது சொன்னேனே ஞாபகமிருக்கிறதா?–'நீ இப்பொழுதுதான் அரும்புவிட்ட ஒரு மொட்டு; நான் மலர்ந்துவிட்ட பூ! என்னைக் கல்யாணம் என்கிற தோட்டக்காரன் பறித்துவிடுவான்' என்றேனே! துளசி! நீ என்னைவிடப் பதினைந்து வருடங்கள் சிறியவள் நான் உன்னிடம் இதைப் பற்றிச் சொல்லவில்லை.

பதினைந்து வருடங்கள் என்பது சர்வ சாதாரணமான சொல் அல்ல துளசி! உன்னைப் போன்ற பெண்கள், கல்யாணமாகி, மனைவியாகி, மாமியாரும் ஆகிவிடுகிருர்கள். துளசி! வேடிக்கைக்காக இதை எழுதவில்லை. நீ குறைந்தது பத்து வருடம் முன்பாவது பிறந்திருக்க வேண்டும்.

எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது. நீ என்னறைக்கு புயலைப் போல வந்து, புத்தகங்கள், பேப்பர், மேஜை, அலமாரி, எல்லாவற்றையும் எடுத்துப் புரட்டிவிட்டுப் போய்விடுவாய், தாறுமாருக அவைகளை வைத்துவிட்டு. உனக்கு வேண்டிய புத்தகமாக இருந்தாலோ, நாற்காலி போட்டுக்கொண்டு அங்கேயே படிக்க உட்கார்ந்துவிடுவாய். நீ என்னுடைய பிரியமான சிநேகிதனின் உறவுக்காரியானதால் நான் ஒன்றும் சொல்லமுடியவில்லை. நான் கட்டில்மீதோ நாற்காலி மீதோ உட்கார்ந்து உன்னைச் சும்மாப் பார்த்துக்கொண்டுதான் இருக்க முடிந்தது. எப்பொழுது நான் நீ தாறுமாருக வைத்தவற்றை ஒழுங்காக எடுத்து வைப்பேனே அப்பொழுது நீ, "தேவலையே! வீட்டுப் பெண்கள்கூடத் தங்களிடம் வேலை கற்றுக்கொள்ள வேண்டும்!" என்பாய்.

என்னுடைய கர்பீரத் தோற்றத்தைக் கண்டு நீ மலைத்தாலும், நான் காலத்தால் கிழவன் என்பதை உன்னிடம் சொல்லவில்லை. சிறுவர்கள் படிக்க வேண்டிய புத்தகங்களை விட்டுவிட்டு நீ நாவல்களும், பெரிய பெரிய நூல்களும் படிக்கவாரம்பித்தாய். இரவு பதினேரு மணிவரைக்கும் நீ உன் தோழிகளுடன் கண்ணைப் பொத்தி ஓடி விளையாடுவது, சரியா–தப்பா ஆடுவது–இப்படிக் கூச்சல் போட்டு என் கவனத்தைக் கவர்ந்தாய். ஆனால் உண்மையில் சொல்கிறேன் துளசி! இப்படி விளையாட்டுப் பருவத்திலுள்ள ஒரு பெண்ணின் இதயத்தில், ஒரு ஓரத்தில் காதல் மலர்ந்து வருகிறது என்பதை நினைக்கவே முடியவில்லை.

நீ பருவ மங்கையாக மலரப் போகிற நிலையில் பன்னிரெண்டு வயதுடையவளாக இருந்தாய்.

ஆனால் நானோ, பருவ ஆசையெல்லாம் கடந்து வந்த இருபத்தி எட்டு வயது வாலிபனுக இருந்தேன். எனக்கும், நம் நாட்டின் பழைய பாணியில் மணம் செய்து வைத்திருந்தால் இன்று ஆறு குழந்தைகளுக்குத் தந்தையாகியிருப்பேன்! விளையாட்டிற்காக இதை எழுதவில்லை!

நான் உண்மையில் நினைக்கவே இல்லை. 'டார்ஜான்' கதைகளையும், சிறுவர் கதைகளையுமே படிக்கத் தகுந்த பன்னிரெண்டு வயதான பெண்ணு என்ன; நீ, காதல் கதைகளை மிகவும் விருப்பத்துடன் படிக்கிருய் என்பதை. நான் உன்னை, என் திருஷ்டியில் ஒரு சிறு பெண்ணுகவே என்னுடைய அன்புள்ள தோழன் பெண்தான் என்றே நினைத்து வந்தேன்.

ஆனால் நான் உன் உடலிலும், உள்ளத்திலும் காலத்தால் மாற்றம் ஏற்படுவதைப் பார்த்துக்கொண்டு தானிருந்தேன். என்றைக்கு என் பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்ததோ அன்றுதான் உன் உள்ளமும் வளர்ந்து வருவதை அறிந்தேன்.

என் பிறந்த நாளை முன்னிட்டு மாலை விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தேன். அதற்காகப் பல எழுத்தாளர்களும் கவிஞர்களும், வாலிபர்களும், வயோதிகர்களும் வந்து கூடியிருந்தார்கள். நான் உனக்கு விருந்தில் கலந்துகொள்ள அழைப்பு அனுப்பவில்லை. நான் மறந்தே போய்விட்டேன். நீ ஒரு சாதாரண பெண்தானே, உன்னை எதற்காக அனுவசியமாகக் கூப்பிட வேண்டும் என்று பேசாமல் இருந்துவிட்டேன். விருந்து முடிந்து, விருந்தாளிகள் போன பிறகு நீ வந்தாய். அப்பொழுதுதான் நான் திடுக்கிட்டேன்–உன் உடலும் உள்ளமும் வளர்ந்து, மாற்றமடைந்து வருகின்றன என்பதை அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன்.

நீ வந்து உட்கார்ந்துவிட்டாய். அன்றைக்குத்தான் நீ புடவை கட்டிக்கொண்டு வந்ததை முதன் முறையாகப் பார்த்தேன். உன்னுடைய 'படபட'த்த கண்ணிற்கு அழகாக மை தீட்டியிருந்தாய். தோளிலிருந்து நழுவிக்கொண்டிருந்த புடவையைச் சரி செய்துகொண்டே என்னைப் பார்த்தாய் நீ அப்பொழுது சாதாரணத் துளசியாக இல்லை; ஒரு யௌவனப் பெண்ணுக விளங்கினுய். நீ என் எதிரில் கம்பீரத்துடன் வந்து உட்கார்ந்து, என் பிறந்த நாள் பரிசாக ஒரு 'எலெக்டிரிக் ஷேவிங் ஸெட்' கொடுத்தாய். உன்னுடைய மனத்தில் 'பார்ட்டிற்கு' கூடக் கூப்பிடவில்லையே என்று வருத்தமாக இருந்தது. ஆனால் நீ பேசாமலிருந்தாய்.

பிறகு நீ சொன்னுய்; "உங்கள் கதைகளில் வரும் பாத்திரங்களைவிட நீங்கள் நன்ருக இருக்கிறீர்கள்!"

நீ அப்பொழுது துளசியாகப் பேசவில்லை என் துளசி நான் எழுதின கதைகளை படிக்கமாட்டாள். ஆனால் நீ ஒரு மங்கையாகிவிட்டாய். பருவ மாறுதல் உன்னை அப்படிப் பேசச் சொன்னது.

நான் பதிலுக்குச் சொன்னேன்: "என் கதைகளில் வரும் பாத்திரங்கள் நானேதான்!"

"ஆனால் கதையில் வரும் பாத்திரங்கள் மிகவும் நன்ருக இருக்கிருர்கள்" நீ 'கலகல'வென்று சிரித்துக்கொண்டே சொன்னுய் "அவர்களுக்கு பிறரின் மனத்தை அறிந்து அதன்படி நடக்கத் தெரியும். அவர்கள் மிருதுவான இதயம் படைத்தவர்கள். ஆனால் நீங்களோ...நீங்களோ கொடிய இதயம், கல்போன்ற இதயக்காரர்!"

உண்மையில் நீ அழவே ஆரம்பித்துவிட்டாய். நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்குப்படியாகி விட்டது. "நன்று துளசி! இனிமேல் இப்படி நடக்காது!" என்று கூறும்படிச்செய்துவிட்டாய்.

நீ கண்ணீரைத் துடைத்துவிட்டாலும் உன் முகத்தில் ஓடும் துன்ப ரேகைகளை நான் கண்டுவிட்டேன். உன் சிரம் தாழ்ந்து இருந்தது. மேஜைமீது வைக்கப்பட்டிருந்த பூங்கொத்துகளுடன் உன் கண்களை ஒப்பிட்டுப் பார்த்தேன். இரண்டும் ஒத்து இருந்தன. அழகான, 'படபட' வென்று இமைகள் அடித்துக்கொள்ளும், நீளமான கண்கள் அவை.

நீ ஒரு பூவினுல் முகத்தை மறைத்துக்கொண்டு சொல்லலானுய்: "வருவோர் போவோர் எல்லாம் என்னைப் பார்த்துச் சின்ன விளையாட்டுப்பெண். ஒன்றுமறியாத துளசி' இவள் என்று சொல்லி பரிகசிக்கிருர்கள். மக்கள் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இதைச் சொல்லிவிட்டு நீ உன்னையே ஒருமுறை பார்த்துக்கொண்டு. வெட்கத்துடன் தலை குனிந்துகொண்டாய்.

"அப்படியா? நீ பெரியவளாகிவிட்டாய் மிகவும் பெரியவளாக, 'யூகிலிப்ட்ஸ்' மரம்போல பெரியவளாக வளர்ந்துவிட்டாய்! அதற்காக ஏன் அழவேண்டும்?"

உன் கண்களில் நிராசையுடன் கூடிய வேதனை ஓடுவதைக் கண்டேன். "பின்னே என்ன? நீங்கள் என்னை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. நான் என்ன தப்பு செய்தேன்? நல்லவள்தான்!"

இவ்வளவு சொல்லிவிட்டுப் பிறகு நீ மறுபடி தலையைக் குனிந்து கொண்டாய். நான் மெள்ள உன்னை ஏறிட்டுப் பார்த்தேன். உன் படபடத்த கண்களின் இமையோரத்தில் கண்ணீர் வழிந்துகொண்டு நின்றது. நீ அழவே ஆரம்பித்துவிட்டாய். உன்னுடைய தலையை என் மார்பில் புதைத்துக்கொண்டு அழ ஆரம்பித்தாய். இந்நிலையில் நம்மை வேறு யாராவது பார்த்திருந்தால் என்ன நினைத்துக்கொள்வார்கள்? நீ பெரியவளாகிவிட்டாய் துளசி. என்னை 'இவ்வாருக' உன் மனத்தில் வைத்து பாவித்து வருகிருய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

பிறகு நான் சொன்னேன். "சரி! நீ உன் வசத்தில் திரும்பி வா! இனி மேல் நாமிருவரும் நண்பர்கள்–சமமான நண்பர்கள்!"

ஆனால் நாம் நினைப்பதுபோல் ஒன்றை அல்லது ஒரு பொருளை இன்னென்ருக மாற்றிவிட முடிகிறதா?

பிறகு ஒன்றிற்குப் பிறகு இரண்டு, இரண்டிற்குப் பின் மூன்ருக–பல சம்பவங்கள் நடந்துவிட்டன. நீ என்னுடைய அறைக்கு வந்து சுக, துக்கங்களைப் பரிமாறிக்கொண்டு, எனக்கு உற்ற தோழனுக மாறிவிட்டாய்.

ஆனால் உனக்கு இது தெரிந்திருக்காது. நீ எனக்கு 'சகா'வாகுவதற்கு முன்பே என் மனத்தில் 'நீலு' இடம் பெற்றுவிட்டாள். நீ அந்த நாட்களில் மிகவும் சிறிய பெண்ணுக ஏழெட்டு வயதுடைய சிறுமியாக இருந்தாய். நீ அந்த நாட்களில் 'டைபாயிட்' ஜுரத்திலிருந்து எழுந்ததால் மிகவும் ஒல்லியாக ஆனால் அழகான பெண்ணுக இருந்தாய். ஒரு சமயம் 'டல்ஹௌஸி'க்கு நாங்கள் சென்றிருந்தபோது உன்னுடைய தாயாரும் வந்திருந்தாள். அவருடன் கூடவே, நீலா அவள்தான் உன் தயாரின் ஒன்றுவிட்ட சகோதரி, உன்னுடைய மன்னி, உன்னைவிடப் பதினன்கு வயது பெரியவளான அவளும் வந்திருந்தாள். உனக்கு நினைவிருக்கும் – நாமெல்லோரும் குதிரை சவாரி செய்தபொழுது நீ நீலாவின் அருகில் உட்கார்ந்திருந்தாய். நீ பனியினுல் உடல் வெடவெடக்க உட்கார்ந்திருந்தாய். அப்பொழுது நானும், நீலாவும் மிகவும் துக்கத்தில் இருந்தோம். நீ சிறியவளாதலால் எங்கள் துக்கத்திற்குக் காரணம் கேட்காமல் எங்கள் துன்பம் நிறைந்த முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாய்.

— 9-ம் பக்கம் —

அஞ்சா நெஞ்சன் வாழ்வு

திராவிட இயக்கத்தின் தளபதி, பகுத்தறிவுப் பாசறையின் படைத் தலைவன், அஞ்சாநெஞ்சன் அழகிரி அவர்கள் காசநோய்க் கிருமிகளுக்கு இரையாகி பத்தாண்டுகள் கழிந்துவிட்டன. 28-3-49 ம் அன்றுதான் மாவீரன் அழகிரி, பெருந்தலைவர் பெரியார் ராமசாமி அவர்கள் காட்டும் வழி நடந்த தீரர் தஞ்சையில் உயிர் நீத்தார்! சென்ற கிழமை 28-3-'59! உருண்டோடிவிட்ட இந்த இடைக் காலத்தில் வளர்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகம் அழகிரியார் இருந்தபோது பிறக்கவில்லை. ஆனால் இன்று மாற்றாரும் போற்றும் வண்ணம் வளர்ந்துவிட்டது! வருங் காலத்தில் பல வெற்றிகளை காணப் போகும் நாம் நல்ல உறுதிகளைப் பெற்றுக்கொள்ள அஞ்சாநெஞ்சனின் அந்த நாட்களை நினைவுகொள்வோம்! வைதிகமும் வர்ணாஸ்ரமும் தமிழகத்தின் இதயத்தைக் கவ்வியிருந்த நாட்களில்–தன்மான இயக்கம் காட்டுத் தீயாகப் பரவிக்கொண்டிருந்த காலத்தில், அழகிரி தன் வெங்கலக்குரலில் பேசி, மக்கள் மன்றத்திலே மனித இனத்தின் மாண்புகளை உயர்த்தும் தத்துவங்களைச் சொன்னார். அந்தக் தளபதியின் வாதத் திறமைதான் எத்தனையோ கரடுமுரடான பண்டிதர்களின் பொய்யுரைகளைத் தவிடுபொடியாக உடைத்துள்ளது.

நம் கே. வி. அழகிரிசாமி அவர்கள் அன்னக்காவடிகள் நிரம்பிய சுயமரியாதை இயக்கத்திலே காலடி எடுத்து வைத்துத் தன்னை இயக்கத்துடன் இறுகப் பிணைத்துக்கொண்டார். பெரியார் தலைமையில் புதியதோர் உலகம் காணப்போகும் நம்பிக்கையில் எதிரிகள் எத்தனை கோடி இட்டழைத்தாலும்தொடேன் என்ற உறுதியுடன் இயக்கத்திலே வளர்ந்தார்! தன்மான இயக்கமும் நீதிக்கட்சியும் ஒன்றாக இணைந்து பணியாற்றத் துவங்கிய காலத்தில் அழகிரி அவர்களின் அடலேறுத்தன்மை பட்டம் பதவிகளுடன் உலாவிய 'பார் அட்லா'த் தலைவர்களுக்கெல்லாம் பணியாத பண்பை வளர்த்தது! சீமான்கள் கட்சியின் தலைவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்களின் உல்லாச வாழ்விற்கு ஏணியான இயக்கத்தைக் கட்டிக் காத்த அழகிரி வறுமையாலே வாடிக் கொண்டிருந்தார்! குமுறுகின்ற உள்ளத்துடன் குடும்பத்தவர் இருந்தாலும் இவர் எந்த நேரமும் 'இயக்கம்! இயக்கம்!' என்றே அலைந்து திரிந்தார். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் எந்தத்திசையிலிருந்து வந்தாலும் துணிவுடன் தாங்கித் தகர்த்த பெருமை அழகிரிக்கு உண்டு! அந்தப் புரட்சி வீரனின் பணியால்தான் நாடு நம்மை இன்று நல்வாழ்த்துக் கூறி வரவேற்கிறது!

1938-39ல் கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் திருச்சியிலிருந்து சென்னைக்குத் தமிழர் பெரும் படையை நடத்திச் சென்ற பெருமையும் நம் அழகிரிக்கே உண்டு! "இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்! நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே! தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்!" என்று தமிழ்ப் பண்ணிசைத்து, இந்தியின் நுழைவைத் தடுப்போம் என்ற துணிவைத் தமிழ்ப் பெருமக்களுக்குத் தந்த பெருமையும் அழகிரி பெற்றதாகும்! கொள்கைக்காகவே வாழ்வு. இயக்கத்துக்காகவே சாக்காட்டின் கொடுமையைத் தாங்கிக்கொள்வோம் என்ற எண்ணத்தில்தான் அழகிரியின் பணி இருந்தது. என்றென்றும் பெரியாரின் தொண்டனாக இருப்பதையே விரும்பினார். இயக்கத்திலே பொறுப்பான பதவியைப் பிடிக்கும் ஆசை அவர் சாகும்வரை அவரது உள்ளத்தில் அரும்பவில்லையென்றால் அவருடைய அருஞ் செயலுக்கு அளவேது? புரட்சிக் கவிஞர் அவர்களும் அழகிரியாரும் நெடுங்காலம் ஒன்றாக இருந்தார்கள். புதுவைக் கடலோரத்தில் மோதி வரும் அலையோசைகளுக்கிடையே தான் கவிஞரின் கவிதையுள்ளம் பேசுமாம். அழகிரி சொல்லடுக்கின் சோபிதம் கண்டு சொக்கிப்போவாராம்! கவிஞர் அவர்களிடத்திலே அழகிரி வைத்திருந்த மதிப்புக்கு சான்றாக ஒரு சம்பவம் உள்ளது. 1946 என்று எண்ணுகிறேன். புதுவையில் திராவிடர் கழக மாநாடு நடைபெற்றது. இடைவேளையில் இல்லம் சென்றுகொண்டிருந்த புரட்சிக் கவிஞரை கழகத்தின் துவக்கம் கண்டு பொறுக்காத காலிகள் கல்லெறிந்து தாக்கிவிட்டனர்! மாநாட்டின் பிற்பகல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அழகிரி பேசினாராம்– **"நான் காலையிலே வராதபோது பல விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகக் கேள்விப்பட்டேன். பன்னெடு நாட்களுக்கு முன் ஒரு சாக்ரடீசை விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டு இன்றுவரை தேடித் தேடிப் பார்க்கிறோம் ஒரு சாக்ரடீசைக் காணமுடியவில்லை. அன்றோர் நாள் மனித உரிமை பேசிய மேதை ஆபிரகாம்லிங்கனைக் கொன்றுவிட்டு இன்றுவரை தேடித்தேடி அலைகிறோம். இன்னும் ஒரு ஆபிரகாம்லிங்கனை நம்மாலே காணமுடியவில்லை. இன்றைக்குக் கவிஞர் பாரதிதாசன்மீது கல்லெறிந்தவர்கள் இன்னும் பல ஆண்டுகளுக்குத் தேடி அலைந்தாலும் அவரைப் போல ஒரு கவிஞரைக் காண முடியாது. எனவே நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்"** என்றவுடன் மாநாடு கையொலி செய்து தன் மகிழ்ச்சிப் பெருக்கைக் காட்டியதாம்! தஞ்சை மாவட்டத்தின் தன்னேரிலாத் தலைவர் பன்னீர்ச்செல்வம் அவர்களும் அழகிரி அவர்களிடத்திலே பெருமதிப்புக்கொண்டிருந்தார்! 1941-ம் ஆண்டில் பன்னீர்ச்செல்வம் லண்டன் நகரத்து இந்தியா மந்திரியின் ஆய்வுரையாளராகப் புறப்பட்டுப் போனபோது எல்லோரையும் போலவே வாழ்த்திப் பேசிய அழகிரி அவர்கள் **"எதிரிகளின் விமானங்கள் வட்டமிடும் வேளையில் பன்னீர்ச்செல்வம் அவர்களை கடல்கடந்து அனுப்புகிறோம். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ எவருக்கும் தெரியாது. எனவே வெளிநாடு செல்லும் செல்வம், திரும்பி நம்மிடம் வந்தால்தான் நம் செல்வம். இல்லையேல் பன்னீர்ச்செல்வம் நாம் இழந்த செல்வமே."** என்று கூடியிருந்தோர் கண்கலங்கும்வகையில் கூறினாராம்! இதனை அனுபவ அறிவின் உண்மையென உறுதிப்படுத்துவதற்காகவே பன்னீர்ச்செல்வம் விமான விபத்தில் ஓமான் கடலில் வீழ்ந்துவிட்டார். தாயகத்தைத் திரும்பவும் காணாமலே அலைகளில் அமிழ்ந்துபோனார்.

அஞ்சாநெஞ்சன் அழகிரியின் பரம்பரையினர் நாம் என்பதனை நம் கலைஞர் கருணாநிதி அவர்கள் அடிக்கடி நினைவூட்டுகிறார். சென்ற கிழமை சென்னையில் காங்கிரசார் கல்லெறிந்து கூட்டத்தைக் கலைக்க முயன்றபோதும் இதனையே சொன்னார்! கருணாநிதி அவர்களை இயக்கத்துக்கு அழைத்துவந்த பெருமை அழகிரிக்கல்ல. அவரது நெஞ்சிலேயிருந்து வெளிவந்த ரத்தத்துளிகளுக்குத்தான் உண்டு! கலைஞரின் அரசியல் ஆசான் அழகிரி! தன் நெஞ்சுகந்த நன்றியைத் தெரிவிக்கும் வகையில் தன் மூத்த புதல்வனுக்கு அழகிரியென்றே பெயர் சூட்டினார்! அழகிரியின் புரட்சிப் பேச்சும் புலவர்களைச் சுட்டெரிக்கும் கனல் மொழிகளும் இன்று நினைத்தாலும் வீரம்பிறக்கச் செய்பவைகளாகும்! சாதாரணக் காங்கிரஸ் தொண்டனாக இருந்த அவரை நம் இயக்கத்தின் முதுபெரும் தொண்டர் எஸ். வி. லிங்கம் அவர்கள்தான் பெரியாருடைய பாசறைக்கு அழைத்துவந்தார்! இன்றும் – நானையும் கலைஞர் கருணாநிதி அவர்கள் அழகிரியாரின் அந்தக் காலத்துச் செய்திகளைச் சொன்னால் கேட்டுக் கேட்டு மகிழலாம். நம் இயக்கத்துப் பெரும் பகுதியை தன் வாழ்நாளில் வைத்துள்ளார்!

அஞ்சாநெஞ்சன் அழகிரியை எதிரிகள் எதுவும் செய்யமுடியவில்லை. **ஆனால் காசநோய்க் கிருமிகள்—**கண்ணுக்கும் புலப்படாத அணுக்கள் அவரைக்கொன்றுவிட்டன! 1948-ம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற ஈரோட்டு இந்தி எதிர்ப்புத் தனி மாநில மாநாட்டில் அறிஞர் அண்ணா தலைமையில் அழகிரி சிறிதுநேரம் பேசினார். இன்னும் இதயத்துள் ஒலிக்கின்றன! சிங்கத்தின் எழுச்சியென முழக்கமிடும் அந்தத் தளபதி அன்று நின்று பேச முடியாமல் உட்கார்ந்தே பேசினார் **"நான் இந்த மாநாட்டில் கலந்துகொள்வது என் தலைவருக்கும், அருமை நண்பர்களுக்கும், பல்லாயிரக்கணக்கான இயக்கத் தோழர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காகத்தான். இதுவே எனது கடைசி மாநாடாக இருக்குமென்று கருதுகிறேன்"** என்று நாதழ தழக்க வார்த்தைகளை அவர் வெளியிட்டபோது கண்ணீர்த் துளிகளைச் சிந்தாதவர்கள் எவருமில்லை! பன்னீர்ச்செல்வம் பற்றிச் சொன்ன முடிவு செயலானது போலவே தன்னைப் பற்றியும் அறுதியிட்டுக் கூறினார்! 1949-ம் ஆண்டு மார்ச் 28 ம் நாள் மாலையில் மாவீரனின் மறைவுச் செய்தியை, நெஞ்சு துடிக்க வைத்த சோகச் செய்தியை, இயக்கத் தோழர்கள் எல்லாம் கேட்டனர்! இறுதிநாட்களில் அவர் பட்ட துன்பத்திற்கு எல்லையில்லை. அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, கலைவாணர் என். எஸ். கே. போன்றவர்கள், தேவையான பொருளுதவி செய்தனர், சாகும் வேளையைக் கொஞ்சம் நகர்த்தினர்! கடைசியாக அறிஞர் அண்ணா அவர்கள் ரூ 400 தோழர் மதியழகன் வாயிலாகப் பட்டுக்கோட்டைக்கு அனுப்பிவைவத்தாராம்! **"மதியழகா! பணமல்ல முக்கியம். அதில் மறைந்து கிடக்கிறதே மனம்—அதுதான் முக்கியம். முன்னாள் தோழன் ஒருவன் உதவி கிடைக்காமல் உயிருக்குப் போராடிக் கொண்டு கிடக்கிறான்; அவனுக்கு உதவவேண்டும் என்று, மறந்துவிடாமல் என்னையும் ஒரு பொருட்டாக வைத்து மதித்து உதவிசெய்ய முன் வந்தானே அண்ணாதுரை–அதற்காக அந்தப் பேருள்ளத்தை நான் போற்றுகிறேன். எனது மகிழ்ச்சியைக் கூறு அண்ணாதுரையிடம். உண்மையான நண்பர் யார், பகைவர் யார் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். மதியழகா! இதனையும் கூறு"** என்று அழகிரி அவர்கள் அறிவித்தாராம்! அவர் குடும்பத்தினருக்கு விட்டுச் சென்ற பெரும் சொத்து ரூ 4000 கடன்! கலைவாணர்தான் ரூ 6000 தேடித்தந்து அடமானச் சொத்துக்களை மீட்டுத் தந்தார்! இன்று தஞ்சையிலே அழகிரியின் கல்லறை. அவரின் உறுதியை —இலட்சியப் பற்றை வளர்த்துள்ள நாம், கண்ணீர்த்துளிகளைக் காணிக்கையாக்கி வணங்குவோம். நினைவு கொண்டு போற்றுவோம்.

—கூடலரசன்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 5 ‖ 4—4—59 ‖ இதழ் 42

திபேத்தில் 'சதிவுடமை'

"பொதுவுடமைத் திருநாட்"டில் தலைவர் பல்லோர்
பொசுங்கிவிழச் சுடப்பட்ட செய்தி கேட்டோம்.
நதியலைபோல் அங்கேரி நாட்டி னுக்குள்
நல்லவர்கள் மாண்டதொரு நிலையுங் கண்டோம்.
புதுமைதரும் எழுத்தாளன் பாஸ்டர் நாக்கை
புகைபோட்ட பொதுவுடமை கண்டோம். நாசர்
அதிகார வரம்பினுக்குள் மாஸ்கோக் கும்பல்
அழிசெயல்கள் செய்ததையும் அறிவிற் கொண்டோம்.

இப்போது மற்றுமொரு துயரச் சேதி!
இந்தியநாட் டெல்லைவளர் திபேத்து நாட்டின்
அப்பாவி மக்களிட மிருந்து தோன்றும்!
அந்நியராம் சீனர்களை விரட்ட எண்ணி
முப்போதும் போராடும் ஏழை மக்கள்
மூச்சுவிட முடியாமல் திகைக்கின் றார்கள்!
தப்பாமல் அவர்களையும் சுட்டுக் கொன்று
தலைலாமா வைத்தேடும் பொதுமைக் கும்பல்!

இதுவேதான் பொதுவுடமை! உலக முற்றும்
இதைக்கொண்டே ஆளவரும் வெறிநாய்க் கூட்டம்!
சதிச்செயல்கள் பொதுவுடமைத் தத்து வங்கள்!
தன்னுரிமை வாழ்க்கைநிலை சவக்கு ழிக்கே!
கதிகலங்கக் கொல்வதிலே கயவர் கூட்டம்
கையாளும் விசாரணையும் நாட கந்தான்!
அதிகாரம் ஒன்றேதான் குறிக்கோள்! சீச்சீ!
அலிகளிலும் பேடிகள்இவ் 'அகிலக் கும்பல்'

தாய்நாட்டை மாஸ்கோவில் விற்ப தற்குத்
தரகர்களாய் வாய்த்தவர்கள்! உலக மெங்கும்
பேயாட்சி செய்வதற்குப் புனித மான
பெயர்கொண்டார்! கட்டிலுக்குக் கீழே கூட
ஓயாத ஒற்றர்களை வைப்பார்! சொந்த
உணர்ச்சிகளை யும்கொல்வார்! தொழிலைக் கொல்வார்!
வாயோரம் மனிதாபி மானம்! இந்த
'மாடு'களை ஒழிப்பதுதான் 'மனிதர்' வேலை! ★

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

கில்லை. ஆனால் இப்படி அமெரிக்காவிடமிருந்து நாம் வாங்குவதுபோல் யாருமே வாங்கியது கிடையாது. மொத்தமாகக் கடன் வாங்கிக் கொள்ளலாம்; ஓர் ஆண்டிற்கு இவ்வளவு தொகை தேவை; அதைப் பெற்றுக்கொள்ளலாம். அதை விட்டு விட்டு சம்பல் நதி திட்டத்திற்கும், சாராவதி நதி திட்டத்திற்கும் என்று தனித் தனியே ஒவ்வொரு திட்டத்தையும் அமெரிக்காவிடம் அடகு வைத்துக் கடன் வாங்குதல் அரசியல், பொருளாதாரக் கோட்பாட்டுக்குள் அடங்கவில்லை.

இரண்டாவதாக, நமது சக்திக்கு மீறிய அளவிற்குத் திட்டம் தீட்டி விட்டு, அதற்குப் பணமில்லாமல் தவிக்க நேரிட்டதால்தானே நம்முடைய பாரத வர்ஷமாம் இந்தியா தேசத்தை ஆளுகின்ற ராஜதந்திரிகள் அமெரிக்காவிடம் கடன் வாங்க நேரிட்டது? ஆகவே நமது சக்திக்கு உட்பட்ட திட்டமாகத் தயாரியுங்கள்; அதற்குத் தேவையான தொகையைக் கூடுமான அளவிற்கு உள்நாட்டிலேயே சேர்க்க முற்படுங்கள்; முடங்கிக் கிடக்கும் மூலதனம் வெளி வருவதற்கும், ஆலை முதலைகள் பெரிய தொழில்களை ஆரம்பிப்பதற்குமான சூழ்நிலையை அரசாங்கத்தினர் உண்டாக்க வேண்டும். விரலுக்குத் தகுந்த வீக்கமாகத் தயாரியுங்கள். அமெரிக்காவிடம் ஜெர்மனியிடம், ஜப்பானிடம், எவ்வளவு கடன் கிடைக்கும் என்று கணக்குப்போட்டு விட்டுத் திட்டம் தயாரிக்காதீர்கள். உள்நாட்டில்-அதாவது நமது பாரத தேசத்தில்-வரிகள் மூலம் எவ்வளவு தொகை வசூலாகும்; தனிப்பட்டவர்களிடமிருந்து மூலதனம் எவ்வளவு கிடைக்கும்; சிறு சேமிப்பு, இதர துறைகள் மூலம் எவ்வளவு கிடைக்கும் என்று கணக்குப் போட்டு திட்டம் தயாரியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்; ஓரளவிற்குப் பிற நாட்டிலிருந்து கடன் வாங்குவதையும் ஆட்சேபிக்கமாட்டோம்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பெரும் அளவில்-பத்தாயிரம் கோடி அளவில் தயாரிக்க இருக்கிறார்கள்; அதில் அமெரிக்காவிடம், ஜெர்மனியிடம், ஜப்பானிடம் நாம் வாங்க இருக்கும் கடன் எவ்வளவு என்பதைத் திட்டக் குழு அங்கத்தினர்கள் தாம் அறிவார்கள். அவர்களுக்குக் கூறுகிறோம்: அயல்நாட்டு உதவியுடன் ரூபாய் பத்தாயிரம் கோடி அளவில் ஒரு பிரம்மாண்டமான திட்டம் தயாரிப்பதைவிட நம் நாட்டுப் பணத்தில் ஐயாயிரம் கோடி ரூபாய் அளவில் ஒரு சிறிய திட்டம் தீட்டுங்கள். அதுவே நமது பொருளாதார வெற்றியாகும்!

-நா. ஜகந்நாதன் எம். ஏ.

★ ★ ★

வெற்றி முழங்குது!



நகராட்சி மன்றத் தேர்தல்கள், நமக்கு இனிக்கும் செய்திகள் பலவற்றை அளித்திருக்கின்றன. காமராசர் ஆட்சியிலே, காங்கிரஸ் டிக்கட்டிலே, நின்ற கனதனவான்களெல்லாம் உதிர்ந்து விழ, கழகம் வளர்த்த தலைமக்கள் பலரும் வெற்றி முழங்கும் எழிற்காட்சியைக் காண்கின்றோம்.

திருவண்ணாமலையில் தன்னை எதிர்த்தவரை படுதோல்விக் காளக்கி வாகை சூடியிருக்கிறார் திரு. ப. உ. சண்முகம் எம். எல். ஏ. அவர்கள், "திருவண்ணாமலைக்கு தேவை சண்முகத்தின் சேவை!" என்று தீர்ப்பளித்த மக்களை நாம் பாராட்டுகிறோம்!

தென்மாவட்டங்களின் வரலாற்றில் ஒரு திருப்பம்! தமிழக அரசியலை உருவாக்கும் மதுரையில் ஒரு மாற்றம்! 30 ஆண்டுகளாக ஏகாதிபத்தியம் செலுத்திய காங்கிரஸ் இந்த நகராட்சித் தேர்தலில் சரிந்துவிட்டது. எதிர்க்கட்சியினர் கூட்டணி அமைத்து வெற்றி கண்டுவிட்டனர். இக்கூட்டணி அமைப்பதிலும், காங்கிரசை முறியடிப்பதிலும் பெரும்பங்கு கொண்டவர் மதுரை மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து அவர்கள். தொண்டுக்கு என்றும் மதிப்புண்டு என்று காட்டிய மதுரை மக்களுக்கு நன்றியுரைக்கிறோம்!



"கோவையிலும், தூத்துக்குடியிலும் நமது கொடி! ஆம்பூரிலும், ஆரணியிலும் நமது வெற்றி" என்று இன்னும் பல செய்திகள் நெஞ்சைத் தொடுகின்றன. இந்த மகிழ்ச்சிச் செய்திகளைத் தந்த அனைவருக்கும் நம் நன்றியும் வாழ்த்துக்களும் என்றும் உள! ★

சிவகெங்கைச் சீமை

காட்சிகள்  வசனத் துளிகள்

வேலும் வாளும் தாங்கிய மறவர் கதை சொல்லும்
வெள்ளித் திரை ஓவியம்! வெளிவருகிறது இம்மாதம்!



"தாயகமே! தன்மானத் தமிழ்க்குலமே! வரவு கூறும் வாசலில் நின்ற பெரியமருது பிரிந்துபோகும் பாதையில் நிற்கிருன் இப்போது! அண்டி வந்த நண்பனுக்கு ஆதரவளித்தவன் அணைக்கத் துடிக்கும் தூக்குக்கயிறின் அருகில் நிற்கிருன் இப்போது. நண்பனுக்காகப் போரிட்டேன். நாட்டுக்காக மடிகிறேன்! சரித்திரத்தில் ஒரு ஏடு பாக்கியிருக்கிறது. எங்கள் பெயரை அதிலே தங்கத்தால் எழுத இங்கே அழைத்து வந்திருக்கிருர் மேஜர் வெல்ஷ். வீர வரலாறு தொடரட்டும்! விடுதலை உணர்ச்சி வளரட்டும்! துரோகிகள் படலம் முடியட்டும்! இந்தத் தூக்குமேடையே விடுதலை வீரர்களின் கடைசி மேடையாக இருக்கட்டும்!"

"இன்று எங்கள் வீரம் தூக்குமேடையில் முடிவடைகிறது. எந்த வீரனுடைய சரித்திரமும் இன்பத்தில் முடிவடைந்ததில்லை. இந்த பலிபீடத்திற்கு நாங்கள் புதியவர்கள் அல்லர். நரைத்துத் திரைத்து, கூன்விழுந்து குருடாகி இழுத்துக் கிடந்து மடிவதைவிட இந்த முடிவிலே பெருமை அதிகம். எங்கள் சமுதாயம் ஒருநாள் எழுச்சி கொள்ளும்! பொங்கும் தமிழர் வெள்ளம் பகைவரின் பூண்டறுக்கும்! காலம் மாறும்! எங்கள் தாயகம் வெல்லும்!"

கயறெனப் பாம்பைக் கழுத்திலிட்டுக்கொண்டு ஏமாந்தவள்; கணவனெனக் கள்ளமனத்தானைக் கைப்பிடித்த கண்ணுத்தாள்! சின்னச்சாமி குள்ளநரியான சேதி கேட்டு வாடிடுகிருள்.

★



கலமேறிப் பொருள் விற்க வந்தோர், வெறியேறி மருதரசர் தலைதாழ்த்தும் காட்சி இது!

★

இடுப்பிலே குத்துவாளும் இதயத்திலே கள்ள நினைப்பும் கொண்ட துரோகி சின்னச்சாமி! பொருள் இருந்தால் புகழ் தானே வரும் எனப் புதுத் தத்துவம் கற்பிக்கும் வஞ்சமதிக்காரன்! வேட்டைக்கு இரை தேடும் சூழ்ச்சித் தோற்றம் இது.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

சென்னை அரசின் மூலம் தில்லி அரசைப் பிடித்துலுக்கவும் அஞ்சுகின்றனர். "காமராசரைப் பகைத்துக் கொண்டால் பதவி பறி போய் விடுமோ?" என்ற அச்சம் துளைக்க, மெருகு குலையாத ஆசனத்தில் அமர்ந்து வருவதும், நகராண்மைக் கழக உறுப்பினன் எனும் மதிப்புடன் உலா வருவதும், யாரேனும் வடநாட்டு அமைச்சர்கள் வரின் தன்னை அறிமுகம் செய்துகொண்டு தானும் ஒரு "ஜெய் ஹிந்த் நமஸ்காரம்" போட்டுவிட்டு வருவதும், வாய்ப்புக் கிடைத்தால் ஆண்டு தோறும் மேயர் பதவிக்குப் போட்டியிட முயல்வதும், பல நேரங்களில் அதனால் ஆன "பயன்"களைப் பெற முயல்வதுமாகத்தான் காலத்தைக் கழிக்கின்றனர். குத்தகை விவகாரங்களிலும் தன்னல வேட்டையிலுமே அன்னார் காலம் கழிந்துவிடுகிறது!

இந்நிலை மாற வேண்டுமெனின், நீதியும் நேர்மையும் கொண்டோர், அறிவும் ஆற்றலும் உள்ளோர், தயை தாட்சண்யம் பாராதோர் நகராட்சியில் இருந்தாக வேண்டும். மாநில அரசானாலும் மத்திய அரசானாலும் தட்டிக் கேட்கும் திறனும் வலிவும் உள்ளோர் வேண்டும். அப்படிப்பட்டோர் தி. மு. கழகத் தோழர்களைத் தவிர வேறு யாராய் இருப்பர்?

"மரம் நட்டல், பெயர் பல தலைமுறைக்கும் நிலை நிற்கப் பல அறம் செய்தல், கோயில் பதினாயிரம் கட்டல் முதலியவற்றைவிட, கோடி நன்மை தருவது ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பது பாரதியின் வாக்கு. அப்படிப் பார்த்தால்சென்னை நகராட்சியினர் 27,570 ஏழையர்க்கு கல்வி தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

'57'-58-ம் ஆண்டுக் கணக்குப்படி சென்னை நகரில் பள்ளி செல்லும் வயதை எட்டிய குழந்தைகள் 2,01,378 பேர் ஆவர். ஆனால் பள்ளியில் இடம் கிடைத்தது 1,73,808 பேருக்குத்தான். இன்னும் 27,570 குழந்தைகட்குக் கல்வி பெற எவ்வசதியுமில்லை! சீர்மிகும் சென்னை நகரில் கவனிப்பாரற்றுத் திரியும் "முதலமைச்சர்"களின் எண்ணிக்கை இது! இன்றையக் குழந்தைகள் தாம் நாளைய முதலமைச்சர்கள்; நாளைப் பிரதமர்கள் என்பதை ஆள்வோர் மறந்துவிட முடியாது! புறக்கணித்திடவும் முடியாது!

எல்லோருக்கும் எல்லாம் எனும் இடம் நோக்கி வைய்யம் நடக்கின்ற இன்னேரத்தில் இவர்களும் கல்வி பெறுவதற்கான வழிகள் யாவை?

இந்தக் குறைபாட்டுக்காக மட்டுமன்று; மற்றையக் குறைபாடுகளும் நீங்க இவ்வழிகள்தான் தென்படுகின்றன. தில்லிக்கொற்றத்திடமும் காமராசர் ஆட்சியிடமும் தட்டிக் கேட்டுப் பணத்தைப் பெறுவது தவிர்த்த வேறு வழிகள் பலப்பல. நகரில் வருமானம் மிகத் தரும் பல தொழில்களையும் நகராட்சியினரே மேற்கொள்ளுதலோடு, அனாவசியமான பல உறுப்புக்களையும் தவிர்க்க வேண்டும்.

காட்டாக, சென்னையில் நகராட்சியினர் நடத்தும் பள்ளிகளின் எண்ணிக்கை 289. அதில் வாடகைக் கட்டடங்களில் நடப்பவை 142 ஆகும். 142 கட்டடங்களையும் சென்னை நகராட்சியினர் சரியான விலை போட்டுத் தமதாக எடுத்துக் கொண்டு, கட்டடக்காரர்களுக்குத் தவணை தவணையாகப் பணத்தைச் செலுத்த வேண்டும். ஒரே தடவையில் பணத்தைச் செலுத்திவிடுவதென்பது நகராட்சியில் இயலாததும் துன்பம் நிறைந்ததும் ஆகும். "அக்கட்டடங்களை ஆர்ஜிதம் செய்யச் சட்டம் இடம் கொடுக்கவில்லையே!" என்று சொல்லிவிட முடியாது. அப்படித் தடை ஏதும் இருப்பின், அவற்றைமாற்றும் சட்டங்களைக் கொணர்வதற்குச் சென்னை அரசினரைத் தூண்டி வெற்றி காண வேண்டும். ஆனால் கட்டடங்களின் விலைகளை மதிப்பிடுகையில் எச்சரிக்கையாய்-நடு நிலையோடு இருந்து வெற்றி பெற வேண்டும். மற்றும் பள்ளிகளின் தேவை அதிகம் உள்ள இடத்தில், உள்ள பள்ளிகளில் "ஷிப்ட்" முறையைக் கொண்டு வர வேண்டும். மேலும் ஒரு மடங்கினர் கல்வி பெற வாய்ப்பளிக்கும் "ஷிப்ட்" முறையை வசதி பெருகும் போது மாற்றிக்கொள்ளலாம். கடந்த 57-58-ம் ஆண்டுகூட ஏழு பள்ளிகளிலும் அதற்கு முந்திய ஆண்டில் ஒன்பதிலும் நகராட்சியினர் "ஷிப்ட் முறை"யை அனுஷ்டித்தனர்.

மற்றும் அண்ணா சொன்ன வழிகள் கூர்ந்து எண்ணற்குரியன. அதுதான் சிலவற்றைத் தேசிய மயமாக்கி அதன் மூலம் ஒரு வருவாயை நகராட்சியினரோ சென்னை மாநில அரசினரோ அடைந்து வளத்தைப் பெருக்குதல் ஆகும். சென்னை நகரில் 30-க்கு மேற்பட்ட பட அரங்குகள் உள்ளன. அவற்றில் ஆறில் ஒரு பங்குக் கட்டணத்தைக் கேளிக்கை வரியாகப் பெறுகின்றனர். நாம் 6 அணா கட்டணம் செலுத்துகிறோம் என்றால் அதில் ஐந்தணா அரங்குக்காரருக்கும் பட வெளியீட்டாளர்க்கும் போக, 1 அணா கேளிக்கை வரிக்கு வருகிறது. ஆறில் ஒரு பங்கு கேளிக்கை வரியே ரூ. 28 இலட்சமாக 58-'59-ல் சென்னை நகரில் வந்துள்ளது. எனின் சினிமா முழுதும் தேசிய மயமாக்கப்படின் சென்னையில் மட்டும் குறைந்தது ரூ 1 கோடியே 48 இலட்சம் வர வாய்ப்பிருக்கிறது. பட அரங்கங்களை இயக்குவதில் 48 இலட்சம் செலவாகிறது என்று வைத்துக்கொண்டாலும் மீதியுள்ள ஒரு கோடி ரூபாய் பெருத்த வருமானம் தானே?

அடுத்த வழி நகராட்சியினர் ஆண்டுதோறும் பொருட்காட்சி நடத்துதல் ஆகும். சென்னையில் ஒரு கட்சியின் தலைமைபீடம் ஏகபோகமாய் ஆண்டுதோறும் பொருட்காட்சி நடத்திவருகிறது. அதனின் மொத்த வருமானம் மறைக்கப்பட்டுவிட்டாலும், அண்மையில் சட்டமன்றில் எழுந்த வினாவுக்குக் கிடைத்த விடையொன்றில், ஒரு இலட்சத்திற்குமேல் மாநில அரசினர் மட்டும் தம் ஸ்டால்களுக்கு வாடகையாகத் தந்ததாகத் தெரிந்தது. தில்லிக் கொற்றத்தினர் அதைவிட அதிகம் தந்திருப்பர். "ஆளும் கட்சியினர் நடத்தும் பொருட்காட்சியில் ஸ்டால் வைக்காவிட்டால் ஆபத்து என்ன நேருமோ?" என்ற அச்சத்தால் ஸ்டால்களை வைத்து வாடகை தந்த முதலாளிமார்களும் உண்டு. அந்த வாடகையும் ஒரு பக்கம். அடுத்து ஆடல்பாடல் காணவரும் மக்கள் தரும் கட்டணம் வேறு. இவ்வளவையும் கூட்டிக் கழித்தால் நகராட்சியினர் ஆண்டுதோறும் 10 பள்ளியோ-மருத்துவமனையோ கட்டுதற்குரிய பணம் கிடைக்கும் ஐந்து நெடும் பாதைகள் போடும் செலவை அடைக்கலாம். இன்னும் எத்தனையோ செலவுகட்கு வாய்ப்புத்தரும் இந்நகர்ப் பொருட்காட்சியை நகராட்சியினர் நடத்திடின் என்ன? ஆளும் கட்சியார் நடத்துவதைப் பறிக்கவேண்டாம். ஆனால் அதைவிட அழகாக, பொலிவாக, எழிலாக ஒரு பொருட்காட்சியை நடத்தி வெற்றிபெறலாமே! ஏன் அதைச் செய்யவில்லை. மதுரை, நெல்லை, கோவை நகராட்சிகளே தாம் நடத்தும் பொருட்காட்சியால் ஆண்டுதோறும் $\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் வரை இலாபம் அடைகையில் சென்னையினர் ஏன் நடத்தக்கூடாது? குறைந்த அளவென்று வைத்துக்கொண்டாலும் 5 லட்சம் ரூபாய் மிச்சப்படுமே! செய்யுமா சென்னை நகராட்சி?

அடுத்ததாக இறைச்சிக் கடைகளை மேற்கொள்ளுதலும் பிறவும் உள்ளன. இவற்றில் உள்ள இலாபத்தை ஏற்கனவே நம் தோழர்கள் விளக்கியுள்ளனர். இவ்வகையில் தம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்கையில் சென்னை நகராட்சியினர் சைக்கிள் வரி போன்று நடுத்தர வகுப்பினரையும் ஏழையரையும் வாட்டும் வரிகளையும் கட்டணங்களையும் அழித்துவிடலாமே!

சைக்கிள் வரி சென்னையில் கிடையாதாம். மெத்த நன்றி. ஆனால் கொத்தும் மற்ற வரிகளின் நிலை என்ன...?

மற்றும் சென்னை நகரில் குறைந்த செலவில் வெளியூர்க்காரர்கள் தங்கிச் செல்ல விடுதிகள் இல்லை. இவற்றை அங்கங்கே சென்னை நகராட்சியினர் கட்டிவைத்தால் அதுவும் பேரளவு இல்லாவிடினும் ஓரளவு வருமானத்தையாகிலும் தரும். இப்போதுள்ள ஒன்றிரண்டு சத்திரங்களைச் சொல்லலாம். ஆனால் அவை பற்றாது.

சென்னை நகர மக்களுக்கு பெருமளவு வசதியோடு, நடத்தினவருக்கு நல்ல வருவாயும் தந்தது டிராம் வண்டி. வெள்ளைக் கம்பெனியார் மூடிவிட்டுப் போனபின் யார் யாரோ நடத்துவதாக முனைந்தனர் ஒரு பயனையும் காணோம். டிராம் சர்வீசையும் சென்னை நகராட்சியினர் எடுத்து நடத்தினால் மெத்தப் பயன் உண்டு. நல்ல வருவாயுடன் நகரில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்கவும் முடியும்.

"எப்படியும் நகராட்சியைக் கைப்பற்றினால் போதும்; அதற்காக என்ன செய்தாலும் சரி!" என்ற தனது வழக்கமான காமராச பாட்டையிலே சென்றுள்ளனர் காங்கிரசார். யார் யார்க்கு எங்கெங்கு செல்வாக்குண்டோ, அவர்களை அணுகிக் காங்கிரஸ் அபேட்சகர்கள் ஆக்கியிருக்கின்றனர். நீதிக் கட்சியில் இருந்த ஒருவர் ஆயிரம்விளக்கில் காங்கிரஸ் கொடியேந்திவிட்டார். மயிலாப்பூர்ப் பகுதியில் மற்றொருவர் காங்கிரஸ்காரர் ஆக்கப்பட்டிருக்கிறார். இருவரும் கடந்த தேர்தலில் நம் ஆதரவுடன் தனித்துப் போட்டியிட்டோராவர். மற்றொருவர் 26-1-'59-ல் காங்கிரசில் சேர்ந்து "தியாகி" பட்டத்துடன் அபேட்சகராய்விட்டார். எப்படியும் தேர்தல் களத்திலே வென்றுவிட வேண்டும் என்று துடிப்பதால் எந்தக் கூத்தையும் ஆடத் தொடங்கிவிட்டனர், தியாகியர். "மௌன குரு"வல்லவா நட்டுவம் செய்வது? ஆட்டுவிப்பவரைப் பொருத்துத்தானே ஆடுபவர் இருப்பார்!

"மௌனகுரு"வின் அருட்பார்வை கிடைக்காததால்-காங்கிரஸ் 'டிக்கட்' கிடைக்காததால், சேத்துப்பட்டில் ஒரு மாணிக்கவாசகமும், ஆயிரம்விளக்கில் ஒரு கிருஷ்ணனுமாகப் பலர் காங்கிரசை விட்டு வெளியேறித் தனியோராய்ப் போட்டியிடுகின்றனர். சிலர் காங்கிரசிலிருந்து வெளியேறியதும் "தி. மு. க. டிக்கட் கிடைக்காதா?" என்று ஏங்கித்துடிக்கவும் செய்தனர். கடிதம் எழுதியும் கேட்டனர். சென்னை மாவட்ட தி. மு. க., அப்படிப்பட்ட பச்சோந்திகளுக்கு இடமளிக்க மறுத்துவிட்டது.

தி. மு. கழகம் இங்கே நிறுத்தியிருக்கும் அத்துணைப் பேரும் பொறுக்கி எடுக்கப்பட்ட ஒளி மணிகள். தேர்தல் களத்திலே கால் முறிந்தவனையும், விழியற்றவனையும், கை வளைந்தவனையும் அனுப்பி காங்கிரசார் தியாகக் கூத்து நடத்தும் இவ்வேளையில், உழைப்பின் சின்னங்களை, பொதுநலத் தொண்டர்களை தி. மு க. நிறுத்தியிருக்கிறது. ஏற்கனவே நம் தோழர்கள் இருவர் '55 தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு வென்று உறுப்பினராகிப் பணியாற்றி வருகின்றனர் சென்னை நகராட்சியில். அவ்விருவரும் தோழர்கள் **அ. பொ. அரசுவும் வி. முனிசாமியும்** ஆவர். இம்முறையும் வெற்றிக்களிப்புடன், போட்டியிடுகின்றனர்.

மீனவர் தலைவர் **ஜீவரத்தினமும், திராவிட மணியும்,** பிறரும் வண்ணாரப்பேட்டையிலே கழகத்திற்கு வலிவு தேடுகின்றனர். பெரம்பூரில் **நல்லதம்பி** போட்டியிடும் வட்டம் உள்ளது.

ஆயிரம்விளக்கிலே பத்து வட்டங்கள் உள்ளன. அடிபட்டும் உதைபட்டும் தியாக முத்திரைகளைத் தாங்கிய தோழர் **இளவரசு** இராயபேட்டையில் கடுமையான போட்டிக்கிடை, கழகக் குரலை முழக்குகிறார். "இளவரசுக்கு அழகில்லை; அதனால் நகராட்சிக்குத் தகுதியில்லை!" என்று குற்றம் சாட்டினாராம், காமராசர் அருகிலே அமர்ந்து "ராஜ்ய பரிபாலனம்" நடத்தும் சுப்பிரமணியம். ஆயிரம்விளக்கிலே மற்றும் சிட்டிபாபு, டி. என். கிருஷ்ணன், அங்கேசன், ஜி. சுப்பிரமணி முதலியோர் போட்டியிடுகின்றனர்.

சென்னை மாவட்ட முன்னாள் செயலாளரும் கண்டிப்பான பேர்வழி என்று பெயரெடுத்தவருமான **கண்ணபிரான்** அவர்கள் தன் குரலை முழக்குகிறார். அலமேலு அப்பாத்துரையார் மெரினாவிலே நிற்கிறார்கள். அப்பகுதி மக்களும் அவர் சேவை தேவை என்கின்றனர்.

மற்றும், மாற்றுக் குறையாத் தங்கங்களான **நீலநாராயணன், சி. ஆர். பாலசுந்தரம், ஜேசுபாதம், மாசிலாமணி** முதலிய பலரும் கழகத்தின் குரலை முழக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இத்துணை பேரும் வெற்றி பெற்று உண்மைக்கு-உழைப்புக்கு - ஊரார் உயர்வுக்கு வழி தேட சென்னை மாவட்டக் கழகத்தார் அயராது உழைக்கின்றனர். அஞ்சாது போட்டியிடுகின்றனர். அவர்களது எண்ணம் வெல்வது, திராவிடப் பெருங்குடி மக்களே! உங்கள் கையில்—உள்ளத்தில், உள்ளது...

-மா. பாண்டியன்.

6. அறுசீர் விருத்தம்.

ஓரடி :

"தித்திகத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்"

இறுதி நாள் : 18-4-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

அறிக்கை

நெல்லைமாவட்டப் பீடித் தொழிலாளர் நிலை

ஆலைத்தொழில்கள் ஆயிரத்திற்கு வாய்ப்பளிக்கப்படாவிடினும், தமிழகத்தில் சில குடிசைத்தொழில்களாகிலும் உள்ளன. ஆட்சியாளரின் அக்கறைக் குறைவினுல் அவையும் பழுதுபட்டு அழிந்துவிடுமோ என அஞ்சத்தக்க நிலையில் உள்ளன. அவற்றுள் ஒன்று பீடித் தொழில். இது குடியாத்தம், வேலூர், பொள்ளாச்சி, திருச்சி, நெல்லை மாவட்டத்தில் நெல்லை நகர், கடையம் ஆலங்குளம்போன்ற இடங்களில் பலருக்கு ஜீவாதாரத் தொழிலாக இருக்கின்றது. இத் தொழிலைக் காத்திடவும், இத் தொழிலாளரின் நிலையை உயர்த்திடவும் பல்லாண்டுகள் போராடியதன் பயனுக அண்மையில் சென்னை அரசினர், பீடித்தொழில் சட்டத்தை நிறைவேற்றினர். சட்டம் நிறைவேறியும் சகாயம் ஏதும் கிடைக்கவில்லை.

இந்தியாவின் தயாரிப்பில் சுமார் 40% பீடி இம்மாவட்டத்தில்தான் தயாராகிறது. இலங்கைக்கு ஏற்றுமதியாகும் பீடியில் 75% நெல்லையிலிருந்துதான் செல்கிறது. நெல்லை மாவட்டமெங்கும் மொத்தம் 3 இலட்சம் பேர். இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர் கடையம், ஆலங்குளம் பகுதியில் மட்டும் 75 ஆயிரம் பேர் இவ்வேலை செய்கின்றனர். அண்மையில் இலங்கை அரசு மேற்கொண்ட இறக்குமதி வெட்டால் நெல்லையில் 20 ஆயிரம் பேர் வேலை இழந்துள்ளனர். அன்னுர் தம் மனைவியர் தாலியைக்கூட விற்றும் பிழைக்க முடியாத நிலையில் உளர். மீதமுள்ள தொழிலாளரும் ஒழுங்காக வாழ முடிவதில்லை. சம்பளப் பட்டுவாடாவில் ஒழுங்கின்மை, குறைந்த கூலி, எதிர்த்துக் கேட்போரை வேலை நீக்கல், கதவடைத்தல் முதலிய கொடுமைகள் குடைகின்றன.

பீடித் தொழில் சட்டம் முழுக்க முழுக்கப் பின்பற்றப்படாவிடினும் மற்ற இடங்களில் ஓரளவு பயன் உள்ளது. 1000 பீடி சுற்றினுல் திருச்சியில் ரூ. 1-62-ம், பொள்ளாச்சியில் ரூ. 1-50-ம் வேலூரில் ரூ. 1-75-ம் கூலி தரப்படுகின்றது. ஆனுல் "ஆலயம் ஆயிரம் கட்டி, தானம் பல்லாயிரம் செய்து புண்ணியம் தேடும்" நெல்லை மாவட்ட முதலாளிகளோ 1000 பீடிக்குப்பத்தணுக்கள் தருவதற்கும் மறுக்கின்றனர். இந்தப் பத்தணுவையும் தொழிலாளர் "போடு பண்டல்" போட்டுத்தான் பெற வேண்டியுள்ளனர். போடு பண்டல் என்பது இது: தொழிலாளர் 1100 பீடி சுற்றிக் கொடுத்தால் 1000 தான் சுற்றித் தந்ததாகக் கணக்கில் எழுதிக் கொள்வர். இதனுல் எடுத்த எடுப்பிலேயே 100 பீடிகள் முதலாளிக்குக் கூலியின்றிக் கிடைக்கிறது. கட்டு ஒன்றுக்கு 25 பீடி விதம் வாங்கும் சில முதலாளிகள் விற்பனைக்கு அனுப்பும் கட்டில் 24 பீடிதான் வைப்பர். இதனுல் 40 கட்டுக்கொண்ட பண்டல்ஒன்றுக்கு 40 பீடி மிச்சமாகிறது. இவ்வாறு முதலாளி "போடு பண்டல்" முறையில் கூலி தராமலே பண்டல் ஒன்றுக்கு 140 பீடியைப் பெற்றுச் சுரண்டுகிருர். இவ்வாறு சுரண்டி இலட்சம் இலட்சமாகச் சேர்க்கும் இம்முதலாளிகளுக்கு அலுவலரின் துணையும் இருப்பதாக எண்ணவும் இடமுண்டு.

இந்த அரைகுறைக் கூலியும் ஒழுங்காய்த் தரப்படுவதில்லை. மாதக் கணக்காகக் கூலிப் பாக்கி நிற்கிறது. ஏழைத் தொழிலாளர், கிடைக்கும் அரை வயிற்றுக்கு கஞ்சியும் காலத்தே கிடைக்காது திண்டாடுகின்றனர். கிராம வாசிகளான அத்தொழிலாளர்கள் ரூ. ஆயிரம் செலவழித்து அம்மன் கொடை நடத்தினுல் அப்போது ஒரு மாதக் கூலி தரப்படுவதுண்டு. அத்தோடு கூலி தரும்போது "மகமை"க்கு என்று ஒரு அணு, இரண்டணு பிடித்தம் செய்வதும் நடக்கிறது.

இதுகாறும் கூறியவற்ருல்நெல்லை மாவட்ட பீடித் தொழிலாளரின் நிலையை நன்குணரலாம். இவற்றை மாற்றுவதற்காக, உடன் அரசினர் இவற்றைச் செய்ய வேண்டும்.

(1) உடனடியாக ஆயிரம் பீடிக்கு 1-6-0 எனத் தாம் நிர்ணயித்துள்ளபடி குறைந்த பட்சக் கூலியை அரசு அமல் நடத்த வேண்டும்.

(2) போடு பண்டல் முறையை ஒழிக்க வேண்டும்.

(3) "மகமை" எடுப்பதை நிறுத்த வேண்டும்.

(4) சம்பளப் பாக்கியுள்ள கம்பெனிகளில் அரசாங்கம் தலையிட்டு உடனடியாகப் பட்டுவாடா செய்ய வேண்டும்.

(5) அரசின் அனுமதியின்றி பீடிக் கம்பெனிகள் கதவடைப்பு செய்யவதைத் தடுக்க வேண்டும்.

இவற்றை அரசு செய்யாவிடின் தொழிலாளர் வாழவும் முடியாது; வளரவும் முடியாது! எதைச் செய்யப் போகிறது, எதையுமே செய்யாத இந்த அரசு?

இப்படிக்கு,

ஆலடி அருணு,
தலைவர்,
நெல்லை மாவட்ட
பீடித் தொழிலாளர்
முன்னேற்ற சங்கம்.

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

"ஒரு மாதம் கழிந்தால் எனக்கு இருபத்தி இரண்டு வயதாகிவிடும் என்னை மணப்பதற்காக அலாகாபாத்காரன் வந்துவிடுவான்" என்ருள் நீலா.

நீ குறும்பாக, "பிறகு என்ன நடக்கும் சித்தி?" என்று கேட்டாய்.

நான் பேசாமலிருந்தேன். என்னுடைய மனத்தில் பூகம்பம் வெடித்துக் கொண்டிருந்தாலும் நான் பேசாமல் இருந்தேன்.

அவள் மேலே பேசலுற்ருள்; "அந்த அலாகாபாத்காரனுக்கு ரேடியோக்கடை ஒன்று சொந்தத்தில் இருக்கிறதாம். அவனுடைய முதல் மனைவி இறந்துவிட்டாளாம். அவனுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிருர்களாம். அந்தக் குழந்தைகளை கவனித்துக்கொள்ளவே ஒரு பெண் அவனுக்குத் தேவையாம்."

நான் என் தொண்டை கிழியும்படி "நீலா" என்று கத்தினேன்.

ஆனுல் துளசி, நீ மெள்ள, சுவாரஸ்யமாக கதை கேட்பதுபோல, "பிறகு என்ன சித்தி?" என்று கேட்டாய்.

"அந்த மனிதனிடத்தில் நிறையப் பணமிருக்கிறதாம். அவன் படித்தது மெட்ரிக்தான் என்ருலும், தனக்கு வரப் போகும் மனைவிக்காக 'ஆகாயத்தில் குதித்து நக்ஷத்திரங்களைப் பறித்துவா' என்ருலும் செய்வானும்!" என்ருள் நீலா.

"ரொம்ப நன்ருயிருக்கிறதே கதை! என்று நீ வாயைப் பிளந்தாய்

அவள் மறுபடி கூறினுள்: "அந்த மனிதன் என் கழுத்தில் முடிச்சுப் போட வருவான். எனக்குப் பரிசாக வழங்க உயர்ந்த ரக 'பிலிப்ஸ்' செட் ரேடியோ ஒன்றும் கொண்டு வருவான், ஏனெனில் அவனுக்கு வேண்டிய 'வேலைக்காரிப் பெண்' கிடைத்துவிட்ட சந்தோஷத்தில்"

"நாம் 'வேலைக்காரியை' விற்கக் கூடாது. எப்பொழுதும் அவளைப் போக விடமாட்டோம்!" என்று அன்று நீ சொன்ணுய்.

அந்த 'வேலைக்காரி'தான் உன் 'சித்தி' நீலா. துளசி! அவளைத்தான் அந்த ரேடியோக்காரன்—அலாகாபாத்துக்காரன் 'விலைக்கு' வாங்கிப் போய்விட்டான். என்னுல் தடுக்க முடியவில்லை. என்னுடைய ஜீவனின் நாடி தீயில் பொசுக்கப்பட்டது என்னுடைய மனம் எரிந்து சாம்பலாகி விட்டது இருந்தாலும் நான் இன்னும் உயிருடன் வாழ்ந்துக்கொண்டிருக்கிறேன். அந்தப் பட்டுப்போன மனத்தில் மறுபடி உன் காதலை நுழைக்கப் பார்க்காதே!

நான் அப்பொழுதெல்லாம்யோசிப்பேன்: நீ இப்பொழுதுதான் ஒன்பதாவது வகுப்பில் படிக்கிருய். உன்னுடைய வீட்டில் எல்லோரும் உன்னை விடப் பெரியவர்கள். இன்னும் பத்து ஆண்டிற்கு உன் கல்யாணப் பேச்சை எடுக்கமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். நீ பி. ஏ. இல்லை. அதற்கு மேலும் படி. ஆனுல் நான்-படிப்பெல்லாம் முடித்துவிட்டு, ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க முயன்றுகொண்டிருக்கிறேன். நம்முடைய வாழ்க்கைப் பாதைகள் தனித் தனியானவை. நம்மிடையில் பதினைந்துவருஷ இடைவெளிஎன்னும் சுவர் இருக்கிறது-அதை நீயும்,நானும் சேர்த்துத் தள்ளினுலும்கூட அசைக்க முடியாது. நான் பதினைந்து வருஷங்களுக்கு முன்பாகப் போகமுடியாது-நீ பதினைந்து வருஷங்களுக்கு முன்பாக வரமுடியாது! வயது என்கிற இத்தனை பெரிய நீள அகலமான ஆற்றை நம்மால் கடக்கமுடியாது.

ஆனுல் நீ-ஒரு கணம்கூட என் வயதைப்பற்றி-நான் உன்னைவிட வயதில் மூத்தவன் என்பதைப்பற்றி நினைத்தும் பார்க்கவில்லை. நீ இந்த மாதிரியான 'சுவரை' நினைத்தே பார்த்திருக்கமாட்டாய். காலம் என்பது மிகவும் சக்தி வாய்ந்தது துளசி! காலம் என்பது ஒருவருடைய வசத்தில் இல்லை. காலமும், சமயமும் நம் கையில், நம் வசத்தில் இருந்தால் மனிதத்தன்மை நம்மை விட்டு எப்பொழுதோ ஓடி மறைந்திருக்கும். நீ ரொம்பவும் கள்ளங்கபடமற்றவள் துளசி. ரொம்பவும் நல்லவள்!

நீலா என்னை விட்டுப் போன பிறகும் உயிருடன் இருக்கிறேன் என்ருல், அதைப்போல நீயும் உயிருடன் இருப்பாய் துளசி. மனிதத்தன்மை எப்பொழுதும் சாவதில்லை. நீயும் சாகமாட்டாய்.பூக்கள் மலருகின்றன. வாடி வதங்கி கீழே விழுந்து எருவாகி, மறுபடி பூக்கின்றன நீலா என்னை விட்டுப் போய்விட்ட பின்பு, என் மனத்தில் யாரும், ஏன் நீகூடத் தான் இடம் பெறவில்லை. நீயும் தனியாக, என்னை நினைத்து நினைத்து ஏங்கித் தவிக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான், நீ இங்கிருந்து போன பிறகு வேருெரு பெண்ணைப் பார்த்து மணம் செய்துகொண்டு விட்டேன். உன் துக்கத்தை எவன் பங்கிட்டுக்கொள்ளமுடியுமோ, அவனைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்.

நீ பெரியவளாகிவிட்டாய். இன்னும் உன் மனம் வளரும். எதிர்காலம் உன் கையில்தான் இருக்கிறது. வாழ்க்கைப் பாதையில் உனக்குத் துணை கொடுக்க நிச்சயம் யாராவது கிடைப்பார்கள். காலம் துக்கம் நிறைந்தது; துன்பம் நிறைந்தது என்ருல் அதற்கு மருந்தும் இருக்கிறது. காலம் இருள் நிறைந்தது என்ருல் ஒளியும் நிறைந்ததுதான். ஆம்; ஒரே ஒரு வார்த்தை: கல்யாணத்தில் நீ அடியெடுத்து வைக்கும்போது, வரனைத் தேர்ந்தெடுக்கும்பொழுது வயது—பணம் என்கிற சுவர்கள் உன் எதிரில் நிற்காதிருக்கட்டும்!

— பி. ஆர். இராசாராம்

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
திண்டுக்கல் ரோடு, மதுரை.

ஏப்ரல்
3உ முதல்
சென்னை மற்றும்
தென்னாடெங்கும்
மாடர்ன் தியேட்டர்ஸ்
வண்ணக்கிளி
சங்கீதம்..K.V.மஹாதேவன் டைரக்ஷன்...T.R.ரகுநாத் வசனம்..ரா.வே.
BALU BROS

? வினா — விடை

"கூடலரசன்" பதிலளிக்கிறார்

போ. மனோகரன், மேக்காமண்டபம்.

கேரளத்தில் சங்கரன் பொதுவுடைமைத் தத்துவத்தைத் தானமாகக் கொடுத்தாரா? தடி கொண்டு கொடுத்தாரா?

கேரளத்துக் கம்யூனிஸ்ட்கள் தத்துவ விளக்கம் தரவில்லை. காங்கிரஸ்காரர்கள் செய்த தவறுகளைத்தான் தங்களின் செயல்களுக்கு ஆதாரமாக்கிக்கொண்டார்கள். மாணவர்கள்மீது தடியடி தர்பார் நடத்தியிருக்கிறார்கள். சந்தனத் தோப்பில் விழுந்த தொழிலாளர் பிணங்களைப் பார்த்து அகில இந்தியக் கம்யூனிஸ்டுகள் மகிழ்ந்துள்ளார்கள். சங்கரன் நம்பூதிரிபாத் கம்யூனிசத்திற்குப் பதிலாக துப்பாக்கித் தோட்டாக்களைத்தான் பரிசாகத் தந்திருக்கிறார்!

இந்தியக் கம்யூனிஸ்ட்களின் பொதுவான குணங்கள் சிலவற்றை எனக்குக் கூறுவீரா?

நீங்கள் எதிர்பாராத நேரங்களில் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்குக் கால்பிடிக்கத் துடித்துக் கட்சியில் தீர்மானம் போட்டுக்கொள்வார்கள்! மாஸ்கோவின்முன் மண்டியிட்டு, பீகிங் நகரத்துச் செய்திகளை வேத வாக்கியங்களாகக் கொண்டு, பஜனைக்கச்சேரி நடத்துவார்கள்! இப்போது முக்கியமாக, கேரளத்துக் கும்மாளம், அதற்கான ஒலி பெருக்கிகள்—விளம்பரங்கள்— வேறு வேலையில்லையே!

★

மு. வெ. சீலன், சென்னை-13.

ரஷ்யநாட்டு 'இரும்புத்திரை'க்கு காரணம் என்ன?

ரஷ்யாவில் அந்தரங்க அரசியல் விளையாட்டுக்கள், சர்வாதிகார வேட்டைகள், மக்களாட்சிப்பண்பை மறந்த போக்குகள் பல உள்ளன. வெளியுலகம் தெரிய முடியாதபடி அவற்றை மறைத்து வைத்திருப்பதால்தான் இரும்புத்திரை நாடாக ரஷ்யா சித்தரிக்கப்படுகிறது. ஸ்டாலின் காலத்துச் செய்திகள் இப்போதைய குருஷ்சேவுக்கும் மிக நெருங்கியிருந்த கூட்டாளிகளுக்கும்கூடத் தெரியாது என்று இப்போது இவர்களே சொல்வது, அந்த 'இரும்புத்திரை' நிலையை உறுதிப்படுத்துகிறது. இரண்டாம் உலகப்போரின் முடிவுக்குப்பின் அங்கிருந்து தப்பிப் பிழைத்து வந்த கைதிகள் சொன்னகதைகளும் செய்திகளும் ரஷ்யாவின் ரகசிய வேடத்திற்குத் துணையாயுள்ளன.

★

மருங்கூர் வளவன், பாளையங்கோட்டை.

கேரளத்துக் கம்யூனிஸ்ட் சங்கரனுக்கும் பிர்லாவுக்கும் நடைபெற்ற ஒப்பந்தம் சரியா?

'காந்தியார் போன்ற தலைவர்கள் பிர்லா மாளிகையில் தங்குவதையே தவறாக மதிப்பிட்ட கம்யூனிஸ்ட்கள் பிர்லாவுடன் தொழில்வள வணிக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்! இதனைக் கண்டித்த வடநாட்டுக் கம்யூனிஸ்ட்கள் கட்சிக் கொள்கைக்குச் சரியல்ல என்றுதான் சொன்னார்கள். மத்தியக் கமிட்டியில் விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால் கோவிந்தன் நாயர் மிரட்டினார். அஜய் கோஷ் அடிபணிந்தார். தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் தாளம் தட்டினார்கள்!

★

சோலை, கடலூர் (புதுநகர்).

கடலூர் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் பேசும்போது, ஜீவானந்தம் கம்யூனிஸ்ட்களை ஸி. ஐ. டி. கவனிப்பதாகப் பேசினாரே— ஏன்?

அவருடைய கடந்த கால வரலாறு நினைவுக்கு வந்திருக்கலாம். ரகசியப் போலீசார் தங்கள் பின்னே வரக்கூடாதென்பதற்காகவும், குற்றக் கைதிகளாக இருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் எல்லாம் (தொண்டர்களைப்பற்றி இதுவரையிலும் பேச்சே இல்லை) விடுதலை செய்யப்படவேண்டுமென்பதற்காகவுமே தாங்கள் கொள்கை மாறிய நிலையில் இருப்பதாக ஜீவானந்தம் போன்ற 'பேராசிரியர்கள்' பத்திரிகையில் எழுதுகிறார்கள் - கடலூரிலும் கண்ணீர் வடித்துக் கதறினார்கள் போலும்.

★

கான், வண்டிப்பெரியார் (கேரளம்)

செஞ்சீனக்காரனுக்கும் இரஷ்யாக்காரனுக்கும் உள்ள நாட்டுப் பற்று தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்கு ஏன் இல்லை?

தங்களுக்கென ஒரு தாயகம் இருப்பதாகத் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் இன்றுவரை சொல்லவில்லை! காரணம் அவர்கள் தம் தந்தையர் நாடெனப் போற்றிப் புகழ்வது ரஷ்யாவை! நவசீனம் அவர்களின் நம்பிக்கையையும் நல்லாதரவையும் பெற்ற இரவல் தாயகம்! இந்தியாதான் தாயகம் என்கலாம்; ஆனால் காங்கிரஸ்காரர்கள் அதனை 'பாரதம்' ஆக்கிவிட்டதால் கம்யூனிஸ்ட்கள் நாடற்றவர்களாகிவிட்டனர்! இவர்களிடம் நீங்களும் நானும் நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் இனப் பற்றையும் எதிர்பார்ப்பதே தவறு.

★

எஸ். முகைதீன், கேரளம்.

உண்மையிலேயே கேரளத்துக் கம்யூனிஸ்ட்கள் நேர்மையாகவும் நிம்மதியாகவும் ஆட்சி செய்கின்றனரா?

இந்திய உபகண்டத்தில் அரசியல் நெறி உணர்ந்தோர் எல்லாம் இந்தக் கேள்வியைத் தருகின்றனர். கம்யூனிஸ்ட்கள் அப்பழுக்கில்லாத நேர்மையுடன் ஆட்சி செய்வதாகத் தான் உரக்கப் பேசுகின்றனர். ஆனால் அவர்களின் செயல்களைக் கணக்கிட்டால் அவர்கள் நேர்மையைத் தூக்கி எறிந்துவிட்டார்கள் என்றே நம்புகிறேன். கம்யூனிஸ்ட் கட்சிக்கு 'லாலி' பாடாத அதிகாரிகளும், நீதிபதிகளும், இடம் பெயர்த்துத் தள்ளப்பட்டுள்ளனர்! தொழிலாளர் மறியல் என்ற பெயராலே பொதுமக்களான ஆடவரும் பெண்டிரும், சிறுவரும் சிறுமியரும் கூடச் குடிக்கத் தண்ணீரும் பெற முடியாமல் மாளிகையினுள் வைத்துப் பூட்டப்பட்டனர். உதவிசெய்ய முன்வந்தவர்களைக்கூட லெனின் காட்டிய வழிமறந்து, சங்கரன் காட்டும் வழிச்செல்லும் கம்யூனிஸ்ட்கள்—தியாகத் தொண்டர்கள் தடுத்துவிட்டார்களாம்! இதற்குப் பெயர் நிம்மதியான ஆட்சியா? ஆந்திர வணிகருடன் அரிசிக் கொள்முதலில் சர்க்காரின் தவறான போக்கினால் பொதுமக்களின் வரிப்பணம் ரூ. ஒரு லட்சம் நட்டமாகிவிட்டதென்று நடுவர் குழுவினர் தீர்ப்பளித்துவிட்டனர். எதிர்க்கட்சியினர் ஆட்சிபீடத்தைவிட்டு வெளியேறுக எனக் கட்டளையிட்டுவிட்டனர். கண்ணீர் வடிக்கின்ற கம்யூனிஸ்ட்கள் காரணம் சொல்லத் தெரியாமல் கலங்குகிறார்கள். இவர்களிடத்தில் நேர்மை எங்கே உள்ளது? நிம்மதி எங்கே உள்ளது?

★

டி. ஏ. சதாசிவம், சேலம்-2.

சரித்திர பூர்வமான மெட்டீரியலிஸத்தின்படிதான் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் செயல்படுகிறார்களா?

இல்லை நண்பரே! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இப்படிச் சிக்கலான தத்துவ விசாரணைக்கே தன்னை இணைத்துக்கொள்வதில்லை. கம்யூனிஸ்ட் தலைவர்களை நம்புகின்ற தொண்டர்கள் இப்படியெல்லாம் கேள்விகளைத் தருவதில்லை! தலைவர்கள் தொண்டர்களை அந்த அளவுக்குத் தயார் செய்வதில்லை. முதலாளி ஒழிக. சுரண்டல் ஒழிக. கூலி உயர்வு தேவை. ஊர்வலம்- செங்கொடி-இப்படி வளர்க்கிறார்கள்! 'கம்பனும் வம்பனும்' என்று உடல் வலிக்காமல் குரல் நோகாமல் கர்ச்சிக்கின்ற ஜீவானந்தம், சந்திரனில் செங்கொடி பறந்துவிட்டதென்று ஜால்ரா போடுபவர். தன்னுடைய ஊழியர்களுக்கு என்றாவது சரித்திர பூர்வமான மெட்டீரியலிஸத்தின் லட்சணத்தையாவது சொல்லியிருக்கிறாரா? அந்த நினைப்பாவது உண்டா? செயல்படுவதும் என்றோ?

★

அன்பரசு, மேட்டுப்பாளையம்.

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் தங்கள் கடவுள் கொள்கையை மக்கள் மத்தியில் கூறாமல் மறைவாய் இருப்பதின் மர்மமென்ன?

மர்மம் எதுவுமில்லை தோழரே! கம்யூனிஸ்ட்கள் கம்பன் காட்டும் கடவுள் ராமன் மகிமை பாடுபவர்கள்; புராணக் கடவுள்கள் எல்லாம் மார்க்ஸ லெனின் மாதிரி வணக்கத்துக்குரியவைகள்! விநாயகர் சதுர்த்தி மிக முக்கியம். 'ஜனசக்தி'க்கு விடுமுறைகூட உண்டு! இந்த பக்தர்களைப்பற்றி நீங்கள் குறை சொலலாதீர்கள்!

கி. சுந்தரராசன், ஈரோடு.

ரஷ்ய நாட்டைப்போல் இந்தியத் துணைக்கண்டத்தை கம்யூனிச நாடாக்க முடியுமா? சக்திக்கேற்ற உழைப்புதேவைக்கேற்ற வசதி-இங்கே செயல்பட முடியுமா? இந்தியக் கம்யூனிஸ்ட்களால் நிறைவேற்ற முடியுமா?

ரஷ்யா ஒரு கம்யூனிச நாடல்ல. சோவியத் சோசலிசக் குடியரசு கூட்டரசுதான். U. S. S. R. என்பதன் விளக்கம். பொதுவுடைமைத் தத்துவ வளர்ச்சி மக்கள் தொகையையும் பரப்பளவையும் கொண்டு உருவாக்கப்படுவதில்லை. இந்தியத் துணைக்கண்டத்தில் ஏகஇந்தியா அகில இந்தியாவாக ஒரு டில்லி ஆட்சிதான் இதனைச் செய்ய முடியுமென்று எவரும் துணிந்து சொல்ல முடியாது! இனவழி, இலக்கிய வரலாற்று வழி பிரிவினை பெற்றுக் கொள்ளும் தனித்தனி தாயகங்கள் தான் தம்மை வழி நடத்தும் தலைவர்களின் விழைவுக்கும் இங்கே பண்படச் செய்யவும், இங்குள்ள மக்கள் பயன்பெறச் செய்யவும் முடியும்! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் துணிந்து பொய்யுரைப்பதிலே வல்லவர்களாகஇருப்பதால் உலகத்திலே மூன்றில் ஒரு பகுதி கம்யூனிசம். இந்தியாவிலும் நாங்கள் சாதிப்போம் என்பார்கள். ஆனால் ஆட்சிப்பீடம் கிடைத்தால் தத்துவம் இவர்களிடத்திலே தலைகீழ்ப் பாடமாகிவிடுவதைத்தான் கேரளத்துச் சோக கீதங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. எனவே கம்யூனிஸ்ட்கள் பொதுவுடைமைத் தத்துவம் பரிபூரணமாக மிளிரும் ஒரு ஆட்சி அமைக்க லாயக்கற்றவர்கள்.

★

டி. இராதாகிருட்டிணன், சென்னை-12.

அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்கு முக்கியப் பதவி தரப்படாதது ஏன்?

முக்கியப் பதவிகள்-அலுவல்கள் தரப்பட்டுள்ளனவே! வடநாட்டிலேயிருந்து வருகின்ற சாதாரணக் கம்யூனிஸ்ட்களையெல்லாம் வரவேற்பது, தமிழ்நாட்டுத் தலைவர்களின் முக்கியப் பதவியும் அலுவலின் கடமையுமல்லவா? அவர்கள் கழுத்திலே விழுந்த மாலைகளைக் கையிலேந்தி வழி அனுப்பி வைப்பதும் இவர்கள்தானே! மார்ஷல் டிட்டோ வந்தபோது கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களுக்குள் ஒளிந்துகொண்டவர்கள், சென்ற கிழமை வந்த ரஷ்ய தூதுக் குழுவினருக்கு மாலை மரியாதைகள் செய்து எஜமான விசுவாசத்தைக் காட்டிக்கொண்டதும் அவர்கள் கடமைதான்!

விருத்தப் போட்டி

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
கன்னலை மானும் இன்மொழி யாளைக்
கண்டது முதலாய்க் கலங்கி
என்னுளம் வாடும் இந்நிலை கண்டும்
எனதுயிர்த் தோழா ! இனிநீ
சொன்னசொல் எண்ணித் துணைசெய மறுத்தால்
துணிவேன் மடலூர்ந் திடவே !
—அ சுருளியாண்டி, கோம்பை.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
கன்னலாய் தேனாய் காண்தமிழ் சோர
கங்குலாய் இந்தியும் நுழைய
தென்றலின் இன்பம் தேடுவள் என்ற
தீதுடை சொல்லையும் களைக்க
அன்னவள் மாய்ந்தாள் ஆழ்கடற் பாரில்
ஆழ்ந்துணர் எந்தமி ழரேநீர் !
—மு. வரதராசன், துறையூர்.

★

கன்னலைப் போலும் சொல்லழ குடையாள்
காவிய ஓவிய மாவாள்
என்னருஞ் செல்வி ஏந்திழை நங்கை
இன்புனம் காத்திடத் தானே
தன்னருட் காதல் தலைவனைக் காணும்
தாங்கொணு ஆசையி னலோ
பொன்னவிர் மேனிப் பெண்மயில் சோலை
போந்ததற் கென்னகா ரணமோ.
—கு. நடராசன், புதுக்கோட்டை.

★

மின்னொளிப் பாவை மென்னடை நடந்து
வீதியில் ஓவியம் போன்று
சென்றிடு கின்ருள்; சேல்விழி நெஞ்சம்
திரை கடல் அலையெனத் துள்ளி
தென்றமிழ் பாடும், செங்கரத் தில்யாழ்
திகழ்ந்திடச் சேயிழை எழில்சேர்
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
—ஓடை இரா. வடிவேலன், பேரோடு.

★

சின்னவிற் புருவச்சேல்விழிப் பெண்ணின்
செங்கனிக் கன்னமே, சிரிப்பே,
உன்னைவிற் பவர்தம் ஓவிய நெஞ்சில்
ஒளியுநீ என்னிடம் உரைப்பாய்
"கண்நவில் எழிலைக் காவியம் விழுங்கும்
கணத்திலே காரிருள் நுழைந்து
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?"
—க. இராமசாமி, ஆயப்பாடி.

★

தன்னுளக் குறிப்பைத் தனிமையிற் கூறத்
தனித்துவந் தனளவள் கொல்லோ ?
என்னுடை உளத்தில் எவரு மறியாக்
குறியிடம் கூறவந் தாளோ ?
அன்னை யின்முடிவு அவள்பிறற் கென்பதை
அறிந்திடச் செயவந் தாளோ ?
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
—மா. பொ. இராமச்சந்திரன், ஏலம்பாக்கம்.

★

பொன்னிடை நோகப் பொற்குடம் ஏந்தி
மெல்லவே வந்தெனை மாய்த்தபின்,
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
புன்னகை யாம்தண் சோலையிலே; அவள்
பொல்லா நோக்குவெம் பாலையிலே;
என்னுயிர் கொண்டே சென்றனள்; அந்த
ஏந்திழைக் கென்னிடம் என்னவோ ?
—தி. சுப்பையா, கோம்பை.

★

புன்னகை சிந்திப் பொங்கிடும் திங்கள்
பார்த்திடு மோஎன் றஞ்சி,
பொன்னொளி வீசும் செங்கதிர் காணப்
போந்திடல் தீதென் றெண்ணி
மென்கொடி ஏகி, மின்னிடை ஆட
மீன்விழி தேடவந் தனளே !
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
—அர. இராசாராமன், வளவனூர்.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
என்னடி தோழி ஈதறி யாயோ !
ஏற்றபோர் வெற்றியை யடைந்து
மன்னவன் பாண்டி நாட்டவன் இன்று
வந்திட்ட செய்திநம் தலைவி
உன்னியே மாலை மாமலர் மாலை
யோடவள் வந்தனள் மருவ !
—சி. காரையா, தஞ்சை.

★

அன்னியர் ஆள நம்திரு நாட்டை,
ஆண்டவர் இன்றுவீழ்ந் தனரே !
சென்னியர் நாடு பாண்டியர் வீடு
சேரனின் கோடுதாழ்ந் தனவே !
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
முன்னவர் வாழ்வை மீட்டிடும் மங்கை
முத்தமிழ் பாடிச்சென் றனளே !
—முத்துதாசன், தஞ்சை.

★

தென்னவர் பூங்கொடி தீந்தமிழ் வாயாள்
தேன்விழி பிறங்கிடும் செய்யாள்
நன்னவர் குமரி நன்றறி கையாள்
நல்லினஞ் சாயலின் மங்கை
தன்னவன் குறியிடம் தாவியே வந்தும்
தளிர்க்கர மாதிவள் பிந்தியே
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலைப்
போந்த தெற்கா ரணமோ ?
—மோகனதாசன், மதுரை.

★

பொன்னியின் பக்கம் கார்குழ லாட
பொங்கிடு துன்பமே லாள
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
நன்னய ஆளன் மாய்ந்திட வாழ்வு
நல்கிடா மாந்தர்கா ரணமோ ?
தன்திறம் போன தாழ்கிழம் பெற்ருேர்
தந்திட மாயுங்கா ரணமோ ?
—மு. க. மணி, குரூர்.

★

என்னுட லோர்டு தன்னுடல் சேர்த்தே
என்தமிழ்த் தென்றலின் துணையில்
புன்னகை தேக்கிப் புத்துயிர் ஊட்டிப்
பொன்உமிழ் நீரினை ஊட்டி
மென்னுடல் இன்பம் மிக்குறத் தந்து
மேதினி வென்றிடும் தங்கப்
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
—மு. சாந்தப், மதுரை.

★

கன்னலைப் போலும் சொல்லழ குடையாள்
காவிய ஓவிய மாவாள்
என்னருஞ் செல்வி ஏந்திழை நங்கை
இன்புனம் காத்திடத் தானே;
தன்னருட் காதல் தலைவனைக் காணும்
தாங்கொணு ஆசையி னலோ;
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
—சு. ப. அருணசலம், புதுக்கோட்டை.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
என்னுயிர் பேணும் தண்ணளி காதலர்
தனித்தெனைக் காணத் தானே ?
முன்னவர் பேணிப் பிரிந்தமை காட்டி
என்னுயிர் போக்கிடத் தானே ?
என்னுயிர்த் தோழி ! காரணம் யாதோ
கழறிட வேண்டு மின்றே !
—மு. சுந்தரப், பி. ஏ. நெல்லை.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ :
கன்னியுன் சாயல் கவினினைச் சுட்டிக்
காதலைப் பெருக்கவோ கண்ணே ?
தென்னிளங் காற்றுன் தென்றமிழ்ப் பேச்சோ ?
தேங்குவளை சுழற்கண்ணின் வீச்சோ ?
சொன்னேநில் லேல்;சொல்! கொதிப்புடல் மாற்றுர்
கொங்குமுத்தச் சுவைநீரைப் பாய்ச்சு.
—மு. முகம்மது அலி, காரைக்கால்.

★

மன்னவன் காய்ந்த வான்வழி ஏகி
மண்மகள் தண்ணிலா வழகி
சென்னிவில் தேயத் தேய்ந்ததோ வேளை ?
செங்கனல் தங்குத்ப் பொறிவீழ்ந்
தன்னவள் வண்ண அந்திவான் சேலை
ஆயிரம் பொத்தலா கியதோ ?
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
—க. ராமசாமி, பொறையாறு.

★

தென்னவர் நாடு தேன்தமிழ்ச் சோலை !
தேர்ந்தவர் நன்கிதை யுணர்ந்தும்
மன்னவர் மூவர் மண்டலம் ஆண்ட
மறத்தமிழ் இன்றிக் கணமே
புன்மையர் ஆரியர் ஆட்சியாற் பாலைப்
புன்னிலம் ஆவதும் கண்டே
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
—ச. அமுதன், திருவில்லிபுத்தூர்.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
அன்றுவெண் ணிலவைக் கண்டுசெந் தமிழில்
அவ்வையும் பாடினள் போன்று
இன்றுயான் இலையோ ? இதமுறப் பாடி
எழில்கவி தருகுவன் என்றே ?
அன்றியே தென்றல் தழுவியக் கவியை
அளிக்குமென் றெண்ணியோ ? சொல்வாய் !
—புலவர். குன்றவாணன், சென்னை-11.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்ன காரணமோ ?
மின்னவிர் மேக வண்ணனைக் காண
வீட்டுச்சி றைக்கான் நீங்கியதே
அன்னவன், கண்ணினுக் கெட்டி,ம றைந்தால்
அம்மயில் வாடி ஏங்காதோ ?
புன்னகைத் தோகை, கண்கணை எய்தால்
போந்தொழில் மாயும்; இன்பமாகும்.
—கோம்பைச் சீரான்.

★

தென்னவர் துன்பம் தீர்த்திட வேண்டித்
தோன்றினன் காஞ்சிசெங் கதிரோன்;
என்னவர் கூட ஏகினர் தோழி !
இன்றமிழ் காத்திட; காதல்
மன்னவர் மேனி வாடுமென் றென்றே
மேவுமென் வரவால் விழித்தார்
பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
—ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
என்றனர்; ஐயம் கொண்டனர் நெஞ்சில்
எய்தினர் அச்சமும் மிகவே
கண்ணகி அன்று தென்னவன் அவையுள்
கைதனில் ஒண்மணிச் சிலம்பு
கொண்டவள் தீயாய்ச் சென்றதைக் கண்டே
கொற்றவைக் காவலில் இருந்தோர்
—குகன்குருசாமி, கமுதி.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
கன்னலும் தன்சுவை குன்றியே கசந்திடும்
கடுநிலை எக்கா ரணமோ ?
பன்னலம் பெற்றிடும் பைந்தமிழ் மக்கள்
பாங்கொழி எக்கா ரணமோ ?
தன்னலம் பேணிடும் தருக்கரின் கூட்டம்
தழைத்திடல் எக்கா ரணமோ ?
—வீர. முருகேசன், மதுரை.

★

பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ ?
தென்றலை மேவித் தண்மலர்ச் சோலை
தன்மனம் சிந்தியழைத் ததுவோ ?
பொன்சுடர் ஓடி அந்தியில் தன்னை
போர்த்திடும் தன்மை யழைத் ததுவோ ?
தன்னுயிர் நாடி தண்மலர்ச் சோலை
தன்னவன் வந்திடுவா னெனவோ !
—மு. கோவிந்தராசன், வாணியம்பாடி.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.